Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

17 MAY 2004

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் திருநெல்வேலியில்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

●விரைவானது ●பாதுகாப்பானது ●நம்பகமானது

இப்பொழுது உலகின் எப்பாகத்திலிருந்தும் மிக துரிதமாக பணத்தினை பெற்றுக்கொள்வதற்கு

- பணம் பெறுவதற்கு வங்கிக்குப் போகத்தேவையில்லை
- வங்கிக் கணக்கு அவ்சியமில்லை
- நீடிக்கப்பட்ட சேவை நேரம்
- 365 நாள் சேவை
- 10 (MTCN) இலக்கங்களைப் பெற்றவுடன் எம்மை நாடவும்

THIRUMURUGAN COM.NET

T.P: 021-222 7310
021-222 7555
021-222 7560
Fax: 021-222 7310
E-mail: thirumurugan@eudoramail.com

46, ஆடியபாதம் வீதி,
(ப.நோ.கூ.ச. முன்பாக)
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 26 (17.05.2004) திங்கட்கிழமை இதழ் :228

# இரு தரப்பினரதும் சம்மதம் பெறப்பட்டதன் பின்னரே பொது இணக்கப்பாட்டு அறிக்கை வெளிவரும்!

## நோர்வே அரசாங்கம் தகவல்

(ஒஸ்லோ)

**இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பான எமது உடன்பாட்டு அறிக்கை அதிகாரபூர்வமாக வெளியிடப்படுவதில் தாமதம் ஏற்படலாம் என நோர்வே அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.**

இலங்கையில் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பதற்காக அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நோர்வே சமாதான தூதுக் குழுவினர் நடத்திய பேச்சுக்களின்போது இணக்கம் காணப்பட்ட விடயங்களை உள்ளடக்கிய பொது உடன்பாட்டு அறிக்கை நோர்வே அரசாங்கத்தால் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

நோர்வே அரசாங்கத்தால் பரிசீலிக்கப்பட்டு வரும் இந்த அறிக்கை, இரு தரப்பினரதும் சம்மதம் பெறப்பட்ட பின்னரே வெளியிடப்படவேண்டும் என்பதால், இதனை அதிகாரபூர்வமாக வெளியிடுவதில் காலதாமதம் ஏற்படக்கூடும் என நோர்வே அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை-

சமாதான முயற்சிகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் அரசாங்கத்திடம் இருந்து மேலும் சில விடயங்களில் இணக்கப்பாடுகள் ஏற்பட வேண்டியிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவத்தினரின் பதவி நிலைகளை கூட்டறிக்கைகளில் புலிகள் பயன்படுத்தக் கூடாதாம்!

### கண்காணிப்புக்குழுவுக்கு பலகல்ல கடிதம்

(கொழும்பு)

அரச படைகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சந்திப்புக்களின் பின்னர் வெளியிடப்படும் கூட்டறிக்கைகளில் இராணுவத்தினரால் பயனபடுத்தப்படும் பதவி நிலைகளை புலிகள் குறிப்பிடக் கூடாது என இராணுவத்தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளார்.

இதுதொடர்பாக, இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது-

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக வவுணதீவில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து கதிர்காமர் பேசவில்லையாம்!

அமெரிக்காவுக்கும் - இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வொஷிங்ரனில் எந்தவித பேச்சுக்களையும் நடத்தவில்லை என வெளிநாட்டமைச்சு நேற்று விடுவித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிந்தது.

இது தொடர்பாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அமெரிக்க விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பாதுகாப்பு உடன்படிக்கை குறித்துப் பேசுவதற்கான எந்தவொரு நிகழ்ச்சிநிரலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பான மறுகேள்விக்கே இடமில்லை. ஏனெனில், இது தொடர்பாக எதுவும் கலந்துரையாடப்படவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்பு ஒப்பந்தப்படி அமெரிக்காவின் போர்க் கப்பல்கள் மற்றும் விமானங்கள் என்பன இலங்கையின் துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களில் தரித்து நிற்கவும், எரிபொருள் நிரப்பவும் வழிவகை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பாலாவின் விடுதலை நூல் நேற்று வெளியீடு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியல், தத்துவம் அடங்கிய 'விடுதலை' நூல் வெளியீட்டு விழா, நேற்று மாலை யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

## வட - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் யசுஷி அகாஷியும் ஏற்றுக்கொண்டார்!

### கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால

தார்.

ஜப்பானின் இலங்கைக்கான விசேட

பெற்றது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க

## இபன் மாட்டின் தமிழ்ச்செல்வனை இன்று சந்திப்பார்

(கிளிநொச்சி)

சர்வதேச மன்னிப்புச் சபையின் முன்னாள் தலைவரும், மனிதஉரிமை ஆணைக்குழுவின் பேச்சாளர் குழுத் தலைவருமான இபன் மாட்டின், இன்று வன்னி சென்று தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மனிதஉரிமைகள் குறித்தும், தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்தும்

யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

இவரைத் தொடர்ந்து நாடாளு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள்; கட்சிகளுடன் ஜே.வி.பி. பேச்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதான முயற்சிகள் குறித்து பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் ஜே.வி.பி. பேச்சுக்களை நடத்தவுள்ளது.

கட்சிகளின் நிலைப்பாடு குறித்தும், சமாதான முயற்சிகள் குறித்த கருத்துக்களை அறிந்து கொள்வதற்குமாகவே ஜே.வி.பி. இந்தப் பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இந்தத் திட்டத்தின் அடிப்படையில் எதிர்வரும் 20 ஆம் திகதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசவுள்ள ஜே.வி.பி. தொடர்ந்து பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேசவிருப்பதாகவும் தெரிவித்துள்ளது. (01)

## கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அமைக்கப்படவேண்டும் என்று, ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி ஏற்றுக் கொண்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஜப்பானின் இலங்கைக்கான விசேட தூதுவர் யசுஷி அகாஷியை, நேற்றுக் காலை 10 மணிக்கு, இலங்கைக்கான ஜப்பானிய தூதுவரின் இல்லத்தில் இரா.சம்பந்தன் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு சுமார் ஒன்றேகால் மணிநேரம் நடைபெற்றது.

இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள தலைமைத்துவம் காட்டி வரும் அசமந்தப்போக்கிற்கு இனிமேலும் சர்வதேச சமூகம் இடமளிக்கக் கூடாது என ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷியை சந்தித்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிக்க இந்திய மீனவர்களை அனுமதியோம்

## யாழ். மாவட்ட மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்பினுள் எக்காரணம் கொண்டும் இந்திய மீன்பிடிப் படகுகளை தொழிலில் ஈடுபட அனுமதிப்பதில்லை என்ற முடிவில் எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் இடமில்லை என யாழ் மாவட்ட மீனவர் சங்கங்கள் உறுதிபடத் தெரிவிதுள்ளன.

வடபகுதி மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையே கடற்தொழிலில் இருந்துவரும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய தென்னிந்திய மீனவர் சங்கங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் 20 பேர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளனர்.

முன்னதாக எதிர்வரும் 20 ஆம் திகதி மன்னாருக்கு செல்லும் அவர்கள் 22 ஆம் திகதியே யாழ்ப்பாணத்துக்கு வருகைதரவுள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் எஸ்.பி அருளானந்தம், இக்குழுவிற்கு தலைமை தாங்கி வரவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நிலையிலேயே யாழ்ப்பா

(12 ஆம் பக்கம் பார்க்க)

களின் சமாதானச் செயலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மனிதஉரிமைகள் குறித்தும், தற்போதைய சமாதான நடவடிக்கைகள் குறித்தும் பேச்சு நடத்தப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இன்று ஆராய்வு

(கொழும்பு)

நாளை நடைபெறவுள்ள நாடாளுமன்ற அமர்வுகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எவ்வாறு நடந்து கொள்வது பற்றி இன்றும், நாளையும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆராயவுள்ளனர்.

இன்று காலை கொழும்பில் ஆரம்பமாகும் இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நாளை நடைபெறும் நாடாளுமன்ற அமர்விற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக அரியநேத்திரனும் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார்.

பதிப்புலக வேந்தர்களே!
நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்



PCC COLOUR DIGTAL PRINTER

நிலா பதிப்பகம்

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION)
சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.

- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE




பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

# விடுதலை நூல் வெளியீட்டு விழாவின் காட்சிகள்


பொதுச்சுடரினை மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை ஏற்றிவைக்கிறார்.


நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் ஈகைச்சுடர் ஏற்றுகிறார்


தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த கண்ணன் தேசியக் கொடியினை ஏற்றுகிறார்


யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி


கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை



நிதர்சனப் பொறுப்பாளர் சேரலாதன்

## தென்மராட்சி வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைப்பட்டியல்!

(மட்டுவில்)

தென்மராட்சி பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் அடங்கிய பட்டியல்கள் மக்களின் பாவனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் வேறுபட்டிருப்பதாக வெளியிடப்பட்ட குற்றச்சாட்டை அடுத்து வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் அடங்கிய பட்டியல் வைக்கப்பட வேண்டுமென தமிழீழ ஆயப்பகுதியும், வர்த்தக சங்கங்களும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து, தென்மராட்சி பகுதிகளிலுள்ள அநேகமான வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் அடங்கிய பட்டியல்கள் வைக்கப்பட்டுள்ளன.

எனினும், இவற்றுள் சில வர்த்தக நிலையங்களில் வைக்கப்பட்டுள்ள விலைப்பட்டியல்களில் அனேகமான பொருட்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லையென குற்றஞ் சாட்டப்படுகிறது.

அத்துடன், இன்னும் சில வர்த்தக நிலையங்களில் பொருட்களின் விலைகள் குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (24)

## மானிப்பாய் பிரதேச சபையிலிருந்து 8 அலுவலகர்களுக்கு இடமாற்றம்!

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையிலிருந்து 8 பேர் புதிய அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர்.

இந்த இடமாற்றம் எதிர்வரும் 19 ஆம் திகதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

புதிய சேவை அலுவலகங்களுக்கு இடம்மாற்றம் பெற்றுச் செல்பவர்களின் விபரங்கள் வருமாறு.

இ.பரமநாயகம் (கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம்- எழுதுநர்), எஸ்.மனோகரன் (வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம் - எழுதுநர்), திருமதி பே.சுகுமார் (சுழிபுரம் பிரதேசசபை - எழுதுநர்), பே.ஞானசூரியர் (சுழிபுரம் பிரதேசசபை எழுதுநர்), எஸ்.விஜயரட்ணம் (யாழ்.வலயக் கல்வி அலுவலகம் - எழுதுநர்), ரி.நாதசொரூபன் (வலிகாமம் கல்வி அலுவலகம் - எழுதுநர்), திருமதி பி.சந்திரசேகரம் (மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - எழுதுநர்), என்.ஜெயசீலன் (யாழ்.கட்டடத் திணைக்களம் - தொழில்நுட்ப உதவியாளர்)

## நிர்வாகிகள் தெரிவு

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் ஆலோசனைக்குழு அங்குரார்ப்பணக் கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும் பிரதேசசபையில் இடம்பெற்றுள்ளது.

பிரதேச சபையின் நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக 15 உறுப்பினர்கள் அடங்கிய புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

இந்த ஆலோசனைக் குழுவின் தலைவராக பி.விக்டரும், செயலாளராக செ.ரமேசும் தெரிவுசெய்யப்பட்டனர். (91)

## ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலக செயற்பாட்டை மேம்படுத்தவும் அடிப்படைத் தேர்ச்சிகளை விருத்தி செய்வதற்குமான செயலமர்வுகள் இன்றும், நாளையும் வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்தச்செயலமர்வில் நூலகத்திற்குப் பொறுப்பான ஆசிரியரையும், இடை நிலைப் பிரிவில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராஜா தெரிவித்தார்.

## கைகலப்பில் காயமடைந்தவர் எட்டு தினங்களின் பின் உயிரிழப்பு!

(யாழ்ப்பாணம்)

பளைப் பகுதியில் நடைபெற்ற கைகலப்பு ஒன்றில் பலத்த காயமடைந்த முதியவர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, எட்டு தினங்களின் பின்னர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் உயிரிழந்தார்.

மாசார் பளையைச் சேர்ந்த முத்துத்தம்பி இரா சையா (வயது-52) என்பவரே உயிரி ழந்தவராவார்.

மேற்படி சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது -

குறித்த நபர் கடந்த 8 ஆம் திகதி தனது வீட்டுக்கு அண்மையில் நடைபெற்ற சாமர்த்தியச் சடங்கு ஒன்றிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தவேளை - வீதியில் சில நபர்களுடன் ஏற்பட்ட தகராறு இறுதியில் கைகலப்பில் முடிந்ததில் காயமடைந்தார்.

தலையில் பலத்த காயமடைந்த இவர் யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்தார். எனினும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார்.

இறந்தவரின் சடலம் மரண விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

முப்பது பயனாளிகளுக்கு

## மானிப்பாய் சமுர்த்தி வங்கியூடாக சுயதொழில் முயற்சிக் கடன்!

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சமுர்த்தி வங்கியூடாக எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் சுயதொழில் முயற்சிக்கான கடன் வழங்கப்படவுள்ளது.

இந்த வங்கியினூடாக முதற்கட்டமாக சுமார் 30 பேருக்கு கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வங்கியின் முகாமையாளர் அருள்ராஜ் யமுனா தெரிவித்தார்.

இவ்வாறு கடன்களைப் பெற விரும்புவோர் தத்தமது பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் தொடர்புகொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகிறது.

## பகவான் கிராம மக்களை பேரவையினர் சந்தித்தனர்

(யாழ்ப்பாணம்)

பகவான் கிராமத்து மக்களுடனான சந்திப்பொன்றை கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் நடத்தினர்.

இந்தச் சந்திப்பில் யாழ்.மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் செ.செம்மணன், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் இணைப்பாளர் பிரபா, ஊடகப் பேச்சாளர் ப.கனகலிங்கம், யாழ்.மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளர் இ.இமையவன் முதலானோர் கலந்துகொண்டனர்.

பகவான் கிராமத்து மக்கள் தமது கிராமத்தில் காணப்படும் பல முன்னேற்றமற்ற தன்மைகள், அபிவிருத்தி செய்யப்படவேண்டிய இடங்கள் தொடர்பாக தேசிய எழுச்சிப் பேரவையினரிடம் முறையிட்டுள்ளனர்.

அபிவிருத்தி தொடர்பாக யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையினர் ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## மானிப்பாய் பிரதேசசபை கலாசார மண்டபத்தில் கலந்துரையாடல

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொது அமைப்புக்களுக்கான கலந்துரையாடல் இன்று பி.ப 3 மணிக்கு மானிப்பாய் பிரதேச சபை கலாசார மண்டபத்தில், சண்டிலிப்பாய் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பவநீதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் மேற்படி பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்தி சங்க நிர்வாகத்தினர், சனசமூக நிலையங்கள், ஆலய பரிபாலனசபை, மகளிர் அபிவிருத்தி சங்கம், கிராமிய அபிவிருத்திக்குழு மற்றும் கழகங்கள் என்பன கலந்துகொள்ளவுள்ளன. (44)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந்த, கனகா நடித்த
கோவில் காளை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
SLIVER
(சி-2386)

ராஜா யாழ்ப்பாணம்.
5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)

நாகம்ஸ் சுன்னாகம்
3 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா, கபாலி, வடிவேலு நடித்த

அருள்
(றீல்ஸ்)
(சி-2397)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.
குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.
1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி

# ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு எம்.பி.பதவியும் இல்லையாம்!

## ஜனாதிபதி சந்திரிகாவின் முடிவில் மாற்றம்

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவை தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கும் திட்டத்தை ஜனாதிபதி சந்திரிகா தற்காலிகமாகக் கைவிட்டிருப்பதாக கொழும்பு செய்தி ஒன்று தெரிவித்தது.

ஜெனரல் அனுருத்த ரத்வத்த மற்றும் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோரை தேசியப் பட்டியல்மூலம் நாடாளுமன்றம் அனுப்ப ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஏற்கனவே திட்டமிட்டிருந்தது.

அதற்காக நாடாளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் முடிந்தவுடன் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பதவியை விட்டு விலகியிருந்தனர்.

ஆனால், முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்த, முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க ஆகியோர் தேசியப் பட்டியலிலோ, வேட்பாளர் பட்டியலிலோ இடம்பெறாததால் இவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமனம் செய்வதற்குத் தடைவிதிக்கக்கோரி உயர்நிதிமன்றில் மனுவொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனுமீதான விசாரணைகள் இடம்பெற்றுவரும் சூழ்நிலையிலேயே நாளை கூடவுள்ள நாடாளுமன்றத்தில் முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க உள்ளிட்ட மூன்று பேர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பொறுப்பேற்க உள்ளனர்.

இதனால் அனுருத்த ரத்வத்தவுக்கு இடமளிக்கப்படவில்லை. தேசியப் பட்டியல்மூலம் நாடாளுமன்ற உறுப்பினராகி, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பதவியைக் கைப்பற்ற அனுருத்த ரத்வத்த முன்னரே திட்டமிட்டிருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவும் தனது குடும்பத்துக்கு நெருக்கமான ஒருவருக்கே பிரதிப் பாதுகாப்பு அமைச்சுப் பதவியை வழங்குவதற்கு விரும்பியிருந்தார்.

ஆனால் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கான முன்னாயத்தங்களில் ஈடுபட்டிருக்கின்றவேளையில், ஜெனரல் ரத்வத்தவை பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக நியமிப்பது புலிகளுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தும் எனச் சந்திரிகா கருதுவதாகக் கூறப்படுகிறது.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தைத் தீவிரமாக முன்னெடுத்தவர் என்ற ரீதியில் ஜெனரல் ரத்வத்த மீதும், புலிகளுக்கு எதிரான கருத்துகளை சர்வதேச ரீதியில் முன்னெடுத்தவர் என்ற ரீதியில் லக்ஷ்மன் கதிர்காமர் மீதும் புலிகளுக்கு ஆழமான கோபம் இருப்பதாகப் புதிய அரசாங்கம் கருதுகின்றது.

இதனால் ஜெனரல் அனுருத்த ரத்வத்தவுக்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சுப் பதவியை மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் நியமனத்தையும் உடனடியாக வழங்குவதில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தீர்மானித்திருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புலிகளுக்கு முரண்பாடானவர்களை முக்கியப்படுத்தாமல் இருக்கும் நோக்கிலேயே கதிர்காமரை சமாதானப் பேச்சுக்குழுவில் அரசாங்கம் சேர்க்கவில்லை என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை நாளை நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியேற்கவுள்ள முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க விரைவில் பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஜாதிக ஹெல உறுமயவில் மாற்றங்கள் செய்யப்படுமாம்

நாடாளுமன்றத்தில் மூன்றாவது பலம் பொருந்திய சிங்களக் கட்சியாக விளங்கும் ஜாதிக ஹெல உறுமய - தமது கட்சியில் பல மாற்றங்களைச் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது.

இந்த மாற்றங்கள் கட்சியின் யாப்பிலும், பதவி நிலைகளிலும் செய்யப்படவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. பௌத்த மதகுருக்கள் தவிர சாதாரண பொதுமக்களும் கட்சியில் அங்கத்துவம் வகிக்கக்கூடியதாக கட்சி மறுசீரமைக்கப்படவுள்ளது.

விரைவில் மகரகமவில் உள்ள இளைஞர் நிலையத்தில், அபிசேக மங்களய என்ற பெயரில் இடம்பெறவுள்ள கட்சி மாநாட்டில் புதிய மாற்றங்கள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவுள்ளது.

வணக்கத்துக்குரிய எல்லாவல மேதானந்த தேரர் தொடர்ந்தும் கட்சியின் தலைவராக இருப்பார் எனவும், கட்சியின் உயர்பீடம் தொடர்ந்தும் மாற்றமின்றி செயற்படும் என்றும் தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் -

கட்சியின் பிரசாரச் செயலாளராக உடுவே தம்மலோக தேரர் செயற்படுவார் எனவும், நாடாளுமன்றக் குழுத் தலைவராக தொடர்ந்தும் அத்துரலியே ரத்ன தேரரே செயற்படுவார் என்றும் குறிப்பிட்டார்.

அத்துடன், கிராமங்கள் தோறும் கிளைகள் அமைத்து, சாதாரண பொதுமக்களையும் இணைத்து கட்சியின் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சிஹல உறுமயவாக இருந்து, ஜாதிய ஹெல உறுமயவாக பெயர் மாற்றம் செய்யப்பட்ட இக்கட்சி தேர்தலில் ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றியதுடன், நாடாளுமன்றத்தில் தீர்க்கமான ஒரு சக்தியாகவும் எழுச்சி கண்டிருப்பதையடுத்தே, கட்சியை உரிய முறையில் வளர்த்தெடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள் ஏகப்பிரதிநிதிகளா? அரசுக்கு ஈ.பி.டி.பி எதிர்ப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் பேசசுக்களை நடத்துவதற்கு எடுத்துவரும் முயற்சி தொடர்பாக ஈ.பி.டி.பி தனது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், தற்போதைய அரசாங்கத்தில் அமைச்சராக இருப்பவருமான டக்ளஸ் தேவானந்தா - தமது எதிர்ப்பை விரைவில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து வெளியிடுவார் என கொழும்புத் தகவல் ஒன்று தெரிவித்தது.

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கு முற்படும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, புலிகளை தமிழ்மக்களின் பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்வதாக நோர்வேமூலம் தெரியப்படுத்தியிருந்தார்.

அரசாங்கத்தின் இந்த முடிவிற்கே ஈ.பி.டி.பி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆனால், ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து இதுகுறித்த கண்டனத்தைத் தெரிவிப்பதற்கு இதுவரை டக்ளஸ் தேவானந்தாவிற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை எனக்கூறப்படுகிறது. அமைச்சராக இருந்தபோதும் டக்ளஸ் தேவானந்தாவிற்கு ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்திப்பதற்கான நேரம் உடனடியாக ஒதுக்கப்படவில்லை என்று இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது.

## கத்தோலிக்க மதகுருவை நாடுகடத்த உத்தரவு!

சிறுவர் துஷ்பிரயோகத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகத்தின் அடிப்படையில் அமெரிக்காவால் தேடப்படும் கத்தோலிக்க மதகுரு ஒருவரை நாடு கடத்தும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தரவிட்டிருக்கிறார்.

தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கத்தோலிக்க மதகுரு தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூலை 21 ஆம் திகதி மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது, சட்ட மா அதிபர் மேற்படி மதகுருவை நாடு கடத்துவதற்கான விண்ணப்பத்தைக் கோருவார் எனத் தெரியவருகிறது.

## சமாதானப் பேச்சில் முஸ்லிம்களுக்கும் பிரதிநிதித்துவம் தரவேண்டும்!

### சந்திரிகாவுக்கு ஹக்கீம் கடிதம்

விடுதலைப்புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களில், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

பேச்சுக்களில் முஸ்லிம்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டியது அவசியமாகும். இது வடக்கு - கிழக்கிலுள்ள முஸ்லிம் மக்களின் நலனுக்கு மிகவும் உகந்ததாக இருக்கும்.

முஸ்லிம் மக்களின் அபிலாஷைகள், தேவைகளை நிறைவுசெய்வதற்கு பேச்சுக்களில் முஸ்லிம்கள் தரப்பு பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகரித்து வருகின்றதாம்!

### மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

மோட்டார் சைக்கிள்களால் ஏற்படும் வீதி விபத்துக்கள் வருடாந்தம் அதிகரித்து வருவதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் அநேகமானவை மோட்டார் சைக்கிளினாலேயே ஏற்படுவதாக திணைக்கள ஆணையாளர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் சுமார் ஒரு மில்லியன் மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வேகமாக மற்றும் மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்துவதே இந்த வீதி விபத்துக்களுக்கு காரணம் எனவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள்களினால் ஏற்படும் விபத்துக்களில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் தொகை அண்மைக்காலத்தில் எவ்வித மாற்றத்தையும் கொணடிருக்கவில்லையென, கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வைத்தியர் ஹெக்ரர் வீரசிங்க தெரிவித்தார்.

## கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமா கற்கைநெறி

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமா பாடநெறி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக பதில் துணைவேந்தர் கலாநிதி எஸ்.ரவீந்திரநாத் தெரவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக மூதவை இதற்கான அங்கீகாரத்தை வழங்கியிருப்பதாகவும், எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஊடகத்துறை டிப்ளோமா மற்றும் வெளிவாரிப் பட்டப் படிப்பு பாடநெறிகளை ஆரம்பிக்குமாறு கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கமும் வேண்டுகோள் விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய அகதிமுகாமிலிருந்து 1759 குடும்பங்கள் தாயகம் திரும்பினர்!

இந்தியாவில் உள்ள அகதி முகாம்களில் இருந்து இம்மாதம் 10 ஆம் திகதிவரை 1759 குடும்பங்கள் இலங்கை வந்துள்ளதாக மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து மன்னார், பேசாலை ஊடாக இலங்கை அகதிகள் நாடு திரும்பியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவர்களில் 90 வீதமானவர்கள் மன்னாா மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

## எல்லாளன் படை உரிமைகோரிய கொலை

# அடித்துக்கொல்லப்பட்ட பின்னரே றக்காவீதியில் சடலம் போடப்பட்டது!

### சுடப்படவில்லையென பொலிஸார் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எல்லாளன் படை எனக்கருதப்படுவோரால் கொலைசெய்யப்பட்ட நபர் - பலமான அடிகாயங்களுக்கு உட்படுத்தப்பட்டு கொலைசெய்யப்பட்ட பின்னரே றக்கா வீதியில் பிணமாகக் கொண்டுவந்து போடப்பட்டதாக தாம் சந்தேகிப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன் றக்கா வீதியில் சடலமாக மீட்கப்பட்டவர் நேற்று உறவினரால் அடையாளம் காணப்பட்டார்.

ஆசான்தெரு, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாண்தைச் சேர்ந்த 22 வயதான சுப்பிரமணியம் சந்திரலலித் என்பவரே கொலைசெய்யப்பட்டவராவார். இவரது சடலத்தை மேற்படி நபரின் பெரியதாயாரான ஜெ.லீலாவதி அடையாளம் காட்டினார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றுமுன்தினம் யாழ்.கச்சேரி - நல்லூர் வீதிக்கு சமீபமாக அதிகாலை 12.30 மணியளவில் வான் ஒன்றில் வந்த இனந்தெரியாத நபர்கள் மேற்படி இளைஞரின் சடலத்தை வீதியில் போட்டுவிட்டுத் தப்பிச்சென்றதாகக் கூறப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் கிடைத்ததையடுத்து நேற்றுமுன்தினம் அதிகாலை 1.30 மணியளவில் சம்பவ இடத்தைச் சென்று பார்வையிட்டனர்.

கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் அடிகாயங்களுக்கு உட்படுத்தி கொலை செய்யப்பட்ட நிலையில் மேற்படி இளைஞரின் சடலம் காணப்பட்டது.

இவரது சடலத்துக்கு அண்மையாக துண்டுப்பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது. அந்தத் துண்டுப்பிரசுரத்தில் தண்டனை வழங்கப்பட்டுள்ள இவர்கள் யாழ்.ஐந்து சந்தியைச் சேர்ந்த சமூகவிரோதிகள் ஆவர். யாழ்.குடாநாட்டில் நடைபெற்ற கொலை, கொள்ளை, பாலியல் வல்லுறவு, சிறுமிகள் மீதான வன்புணர்ச்சி, கூலிக்கு ஆட்கடத்தல் போன்ற, சமூகவிரோத செயல்களைச் செய்ததில் இவர்கள் முக்கியமானவர்கள்.

இன்னும் பலர் இருக்கின்றனர். இன்று இச்செயலுக்கான தண்டனையை இவர்களுக்கு வழங்குகின்றோம். மிகுதியானவர்களுக்கான தீர்ப்பை பினனர் வழங்குவோம். இனி நாட்டில் எவராவது சமூகவிரோத செயல்களில் ஈடுபடுவார்களாயின் எமது தண்டனைகள் தொடரும்.

இயல்பான, நீதியான வாழ்வுக்காக எல்லோரும் ஒன்றிணைந்து கொள்வோம். நேற்றைய, நேற்றுமுன்தினம்,, சம்பவத்திற்கும் நாமே உரிமை என்று எழுதப்பட்டிருந்தது.

மேற்படி நபரின் சடலத்தை நேற்றுக்காலை 9.30 மணியளவில் மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் பார்வையிட்டபின்னர், பொலிஸார் கொலைசெய்யப்பட்ட நபரின் சடலத்தை யாழ்.போதனா வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்காக ஒப்படைத்தனர்.

இந்தக் கொலைச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

கொல்லப்பட்ட இளைஞர் குற்றச்செயல்களுடன் தொடர்புடையவராக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (தீ)

### அவுஸ்ரேலியப் பயணத்திலிருந்து

# விலகப்போவதாக முரளிதரன் மிரட்டல்



இலங்கை அணியின் நட்சத்திர சுழற் பந்து வீச்சாளரான முரளிதரனின் பந்து வீச்சு சரியானது அல்ல என்று அவுஸ்ரேலிய பிரதமர் ஜோன் ஹவாட் கூறியுள்ளார். இந்த நிலையில் இலங்கை அணியின் எதிர்வரும் அவுஸ்ரேலியப் பயணத்தைப் புறக்கணிக்கப் போவதாக முரளிதரன் மிரட்டியுள்ளார்.

தன்னுடைய பந்துவீச்சுப் பற்றி தீர்ப்பு சொல்வதை விட அவுஸ்ரேலியாவை ஆட்சி செய்வதில் ஹவாட் கவனம் செலுத்தினால் நன்றாக இருக்கும் என்று முரளிதரன் கருத்துத் தெரிவித்துள்ளா.

ஹவாட் கூறிய கருத்துக்களால் வரும் ஜுலை மாதம் நடைபெறவிருக்கும் இலங்கை அணியின் அவுஸ்ரேலியப் பயணத்தில் இருநது விலகுவது குறித்து யோசித்துவருவதாக முரளிதரன் தெரிவித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 523 விக்கெட்டுக்களை வீழ்த்தி அதிக விக்கெட்களை வீழ்த்தியவர்கள் பட்டியலில் முரளிதரன் முதலிடத்தில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

அவுஸ்ரேலியப் பிரதமர் ஹவாட் கருத்துக் குறித்து முரளிதரன் கூறுகையில்- அவுஸ்ரேலியாவின் பிரதமர் இதுபோன்ற கருத்துக்களை கூறக்கூடாது. எனவே அவுஸ்ரேலியா பயணத்தில் இருந்து விலகுவது குறித்து யோசித்து வருகின்றேன். உண்மை என்னவென்று தெரியாத நிலையில் அவுஸ்ரேலியாவின் பிரதமர் இதுபோன்ற கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடாது என்று கூறினார்.

அவுஸ்ரேலியப் பிரதமரின் இந்தக் கருத்தானது அரசியல் பிரச்சினையாக மாறியிருப்பதால் அவுஸ்ரேலியாவிற்கான பயணம் செல்வது குறித்து இலங்கை அரசிடம் ஆலோசனை நடத்த இருப்பதாகவும் முரளிதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டைப் பற்றி கவலைப்படுவதை விடுத்து இதுபோன்ற கருத்துக்களை அவுஸ்ரேலியப் பிரதமர் கூறக்கூடாது என்றும் புலவாயோவில் தறபோது நடைபெற்றுவரும் சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல்நாள் ஆட்டத்திற்குப் பின்பு பேட்டியளித்த முரளிதரன் மேலும் கூறினார்.

### அணியில் மீள இணைந்துகொள்ள

# விலகிச் சென்ற சிம்பாப்வே வீரர்களுக்கு 21 நாட்கள் காலக்கெடு விதிப்பு

(ஹராரே)

சிம்பாப்வே அணியிலிருந்து வெளியேற்றப்பட்ட 12 வீரர்கள் மீண்டும் விளையாடும் விதமான புதிய நோட்டீஸ் ஒன்றை சிம்பாப்வே கிரிக்கெட் சபை அனுப்பியுள்ளது.

சிம்பாப்வே கிரிக்கெட் அணியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் கப்டன் உட்பட 12 வீரர்கள் அணியை விட்டு நீக்குவது பற்றிய சர்ச்சைக்குரிய முடிவை சிம்பாப்வே அணி கைவிட்டது.

இதற்குப் பதிலாக இந்த 12 வீரர்களும் மீண்டும் விளையாட வசதியாக 21 நாட்கள் கொண்ட புதிய நோட்டீஸ் ஒன்றை சிம்பாப்வே கிரிக்கெட்சபை அனுப்பியுள்ளது.

கிரிக்கெட் விளையாட்டின் நன்மையைக் கருத்திற்கொண்டு 12 வீரர்களையும் அணியை விட்டு நீக்கும் முடிவை கைவிட்டு விட்டதாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒழுங்கு நடத்தை விதிகளை மீறியதை சரிசெய்து கொள்ளவும், பயிற்சிகளில் தொடர்ந்து கலந்துகொள்ளவும் இதன் மூலம் சிம்பாப்வே அணியில் இடம்பெறவும் வசதியாக 21 நாட்கள் நோட்டீஸ் 12 வீரர்களுக்கும் அனுப்பப்பட்டு இருக்கிறது.

21 நாட்கள் காலக்கெடு கடந்த 14 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளதாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய நோட்டீசையும் 12 வீரர்களும் புறக்கணித்தால் வீரர்களின் ஒப்பந்தம் ரத்துச்செய்வதுபோன்ற கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சிம்பாப்வே கிரிக்கெட் சபை எச்சரித்துள்ளது.

சிம்பாப்வே அணியின் தேர்வுக்குழுவில் ஒரு சில உறுப்பினர்களை நீக்கக்கோரி முன்னாள் கப்டன் ஹீத்ஸ்ரீக் முன்வைத்த வேணடுகோள் நிராகரிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட பிரச்சினையில் வெர்மியூலன் தவிர சிம்பாப்வே அணியிலிருந்த வெள்ளையின வீரர்கள் அணியை விட்டு வெளியேறினர்.

# விளையாட்டு

# உலகக்கிண்ண உதைபந்தாட்டம்; 2010 இல் தென்னாபிரிக்காவில்



2010 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி தென்னாபிரிக்காவில் நடைபெறும் என்று சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் நேற்று அறிவித்தது.

4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி நடத்தப்பட்டு வருகிறது. கடந்த போட்டி தென்கொரியா மற்றும் ஜப்பானில் நடந்தது.

அடுத்த உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி 2006 ஆம் ஆணடில் ஜேர்மனியில் நடைபெறும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு உள்ளது.

2010 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணப் போட்டியை நடத்தும் நாடு எது என்பதை முடிவுசெய்ய சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளன செயற்குழுக் கூட்டம் சுவிட்சர்லாந்தில் நேற்றுமுன்தினம் நடந்தது.

இந்தப் போட்டியை நடத்த தெனனாபிரிக்கா, மொராக்கோ, எகிப்து, லிபியா, துனிசியா ஆகிய நாடுகள் விருப்பம் தெரிவித்து இருந்தன.

கடைசி நேரத்தில் துனிசியா விலகிக்கொண்டது. லிபியா தகுதி நீக்கம் செய்யப்பட்டது.

தென்னாபிரிக்கா, மொராக்கோ இடையே கடும் போட்டி நிலவியது. வாக்கெடுப்பில் தென்னாபிரிக்கா 14 வாக்குகள் பெற்று பெற்றிபெற்றது. மொராக்கோ 10 வாக்குகளைப் பெற்றது. எகிப்துக்கு வாக்குகள் எதுவும் கிடைக்கவில்லை. வாக்கெடுப்பில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா 2010 ஆம் ஆண்டுக்கான உலக கிண்ணப் போட்டியை நடத்தும் என்று சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் ஜெப பிளாட்டர் கூட்டத்தில் அறிவித்தார்.

அப்போது கூட்டத்தில் பங்கேற்ற தென்னாபிரிக்கா முன்னாள் அதிபர் நெல்சன் மண்டேலோ உட்பட அந்த நாட்டுக் குழுவினர் மகிழ்ச்சியை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டனர். 2006 ஆம் ஆண்டுக்கான போட்டியை நடத்தும் வாய்ப்பை தென்னாபிரிக்கா ஒரு வாக்கு வித்தியாசத்தில் நழுவவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொல்கத்தா மைதானத்தில் சதமடிக்க கங்கூலி விருப்பம்

(புதுடெல்கி)

இந்திய அணியின் சாதனைக் கப்டனாக திகழ்பவர் கங்கூலி. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடரைக் கைப்பற்றிச் சாதனை படைத்ததன் மூலம் அவர் சிறந்த கப்டனாகக் காட்சியளிக்கிறார்.

டெஸ்ட்டில் அதிக வெற்றிபெற்ற இந்திய கப்டனாக கங்கூலி உள்ளார். அவரது தலைமையின் கீழ் வெளிநாட்டு மண்ணில் அதிக வெற்றி கிடைத்திருக்கிறது.

32 வயதான கங்கூலி 73 டெஸ்ட்டில் விளையாடி 4, 586 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 11 சதம் அடித்துள்ளார். இதில் தனது சொந்த ஊரான கொல்கத்தாவில் இதுவரை சதம் அடித்தது இல்லை.

கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் 'சதம்' அடிப்பதை விரும்புகிறேன் என்று கங்கூலி கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

பல்வேறு மைதானங்களில் சிறப்பாக ஆடியிருந்தாலும், எனது சொந்த ஊரான கொல்கத்தாவில் சிறப்பாக ஆடமுடியாதது வருத்தமே. அங்கு சதம் அடிப்பதை நான் மிகவும் விரும்புகிறேன். அதற்கான காலம் விரைவில் வரும். சொந்த ஊர் ரசிகர்கள் என்மீது அளவு கடந்த அன்பு வைத்திருக்கிறார்கள் என்று கங்கூலி மேலும் கூறினார்.

# கட்டார் சுப்பர் கிராண்ட் பிரி இந்திய வீராங்கனை சாதனை



கட்டாரில் நடந்த சுப்பர் கிராண்ட் பிரி தடகளப் போட்டியில் நீளம் தாண்டுதலில் இந்திய வீராங்கனை அஞ்சு ஜோர்ஜ் 6.82 மீற்றர் தூரம் தாண்டி தங்கப்பதக்கம் வென்றார்.

இந்தியாவின் முன்னணி தடகள வீராங்கனை அஞ்சு ஜோர்ஜ் கேரளாவைச் சேர்ந்தவர்.

பாரிசில் நடந்த உலகத் தடகளப் போட்டியில் அஞ்சு 6.70 மீற்றர் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்றார். இதன் மூலம் உலகப் போட்டியில் வென்ற முதல் இந்திய வீராங்கனை என்ற பெருமையைப் பெற்றார்.

எதென்ஸில்- ஓகஸ்ட் மாதம் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்போட்டிக்கு தயாராகும் விதமாக அஞ்சு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்று வருகிறார். சமீபத்தில் நடந்த ஜப்பான் ஓபன் கிராண்ட் பிரி போட்டியில் 6.46 மீற்றர் தாண்டி 4 ஆவது இடமே பெற்றார்.

இந்த நிலையில் கட்டாரில் நடந்த சுப்பர் கிராண்ட் பிரி தடகளப் போட்டியில் அஞ்சு ஜோர்ஜ் பங்கேற்றார். அதில் அவர் சிறப்பாக தாண்டி தங்கப்பதக்கம் வென்றார்.

முதலிரண்டு முறையும் பவுலாகத்தாண்டி ஏழு மீற்றரைக் கடந்த அஞ்சு கடைசியாக 6.82 மீற்றர் தாண்டினார். இது புதிய இந்தியத் தேசியத் சாதனை அளவாகும். ஆனால் அப்போது அங்கு வீசிய காற்றின் அளவு (வின்ட் ஸ்பீட்) அதிகமாக இருந்ததால் அது தேசிய சாதனையாக ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதற்கு முன்பு அவர் அவ்வளவு தூரம் தாண்டியதில்லை. அவர் 2001 ஆம் ஆண்டு திருவணந்தபுரத்திலும், 2002 ஆம் ஆண்டு டெல்கியிலும் நடந்த போட்டியிலும் 6.74 மீற்றர் தாண்டியதும் தேசிய சாதனையாக உள்ளது.

27 வயதான அஞ்சு ஜோர்ஜ் 6.82 மீற்றர் தாண்டியதன் மூலம் ஒலிம்பிக்கில் பதக்கம் வெல்லும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

### ஹொக்கி விளையாட்டில்—

# பெனால்டி கோனர் விதிமுறை சர்வதேச ரீதியில் மாற்றம்!

ஹொக்கி போட்டிகளின்போது - வழங்கப்படும் பெனால்டி கோனரை செயற்படுத்துவதில் மாற்றங்கள் செய்யப்பட்டு புதியமுறை ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. ஹொக்கி விளையாட்டின் தன்மையை மாற்றாத வண்ணம் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த மாற்றம் அடுத்த ஜுன் மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வருகின்றது. இந்த தகவலை சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு (எவ்.ஐ.எச்) வெளியிட்டுள்ளது.

எதென்ஸில் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறவுள்ள நிலையில் இந்த மாற்றம் செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பெனால்டி கோனர்களின்போது இந்த வாய்ப்பு கிடைத்த அணி வீரர் அடிக்கும் ஷொட்டை தடுக்க எதிரணி வீரர்கள் பந்துக்கு நேராக கோல் எல்லையில் இருந்து ஓடுவதுண்டு. பெனால்டி கோனர் வாய்ப்பு கிடைத்த வீரர் எதிரணியின் கோல் பகுதியை நோக்கி அடிக்கும் ஷொட்டை தடுக்க வீரர்கள் ஓடுவார்கள்.

அவ்வாறு பந்தை நேருக்கு நேராகச் சந்திக்கும்போது - ஒன்று அடிக்கப்படும் பந்தானது, தடுக்க ஓடிவரும் வீரர் மீது பட்டு விடும். இந்தக் காரணத்திற்காகவே வீரர்கள் பந்தைத் தடுக்க நேரடியாக ஓடுவதுண்டு. அப்படி வீரரின் மேல் பந்து பட்டுவிட்டால் எதிரணிக்கு விதிகளின்படி ப்ரிஹிட் வாய்ப்பு கொடுக்கப்படும்.

இந்த நடவடிக்கை ஹொக்கி விளையாட்டின் தன்மையை ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லையென்று சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மேலும் பெனால்டி கோனர்களின்போது இப்படி வீரர்கள் வேண்டுமென்று அடிக்கப்படும் ஷொட்டைத் தடுக்க பந்து அடிக்கப்படும் திசைக்கு நேராக ஓடுவது வீரர்களுக்கு பலமான காயம் ஏற்படுவதற்கும் வாய்ப்பு உள்ளது என சர்வதேச ஹொக்கி கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

ஆனால், தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள புதிய விதியின்படி பெனால்டி கோனகர்ளின் போது அடிக்கப்படும் முறையான உடலில் சொட்டைத் தடுக்க வேண்டுமென்றே பந்துக்கு நேராக ஓடும் வீரர்களுக்கு தண்டனை வழங்க நடுவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இப்படிச் செய்யும் வீரர்களுக்கு எச்சரிக்கையும் எதிரணிக்கு மற்றொரு பெனால்டி கோனர் வாய்ப்பும் வழங்கப்படும். இதேநிலை தொடர்ந்து நீடித்தால் பெனால்டி ஸ்ட்ரோக் வழங்கப்படும் அல்லது இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடும் வீரருக்கு தடை வழங்கவும் நடுவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

## பல்கலைக்கழகங்கள்

# தமது சமூகப் பொறுப்பிலிருந்து ஒருபோதும் விலகிவிட முடியாது

## விஞ்ஞானபீட பீடாபதி குமாரவடிவேல் தெரிவிப்பு

பல்கலைக்கழகங்கள் தமது சமூகப் பொறுப்பில் இருந்து ஒரு போதும் விலகிவிட முடியாது. தனியே கல்வியை மட்டும் போதிப்பது பல்கலைக்கழகங்களின் நடவடிக்கைகளாக இருக்க முடியாது. அதற்கு மேலாகவும் பல்கலைக்கழகங்களுக்குப் பல பொறுப்புக்கள் உண்டு. அதிலும் குறிப்பாக சமூகப் பொறுப்பு என்பது மிகவும் முக்கியமானதாகும் என யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் கே.குமாரவடிவேல் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத்தினால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வார இறுதிநாள் நிகழ்விலே பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.நவரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தாவரவியற்துறைத் தலைவர் என்.ரவிவர்மனும் கௌரவ விருந்தினர்களாக நமது ஈழநாடு பத்திரிகை நிர்வாக இயக்குநர் சி.சிவமகாராசா, தினக்குரல் பத்திரிகைப் பொதுமுகாமையாளர் ஆ.சி.நடராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இங்கு பேராசிரியர் குமாரவடிவேல் தொடர்ந்து உரையாற்றுகையில், கல்வித்துறையிலே பல்கலைக்கழகங்களுக்குத்தான் அரசினால் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால்அது துரதிஷ்ட வசமாக எமது பல்கலைக்கழகத்திற்கு குறைந்தளவு நிதியே ஒதுக்கப்படுகிறது. எமது தேவைகள் அதிகமாகவுள்ள போதும் எமக்கான நிதி ஒதுக்கீடு மிகவும் குறைவு.

பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்பட்டும் நிதியில் பெரும் பகுதி பொதுமக்களிடம் இருந்தே பெறப்படுகிறது. எனவே, அந்தப் பணம் எவ்வாறு செலவழிக்கப்படுகிறது என்பதைப் பொதுமக்களுக்கு அறிய வைக்க வேண்டியது அவசியமானதாகும். இதற்கு ஊடகத்துறையினருடைய பங்களிப்பு மிக முக்கியமானதாகும்.

இன்று சிலர் பல்கலைக் கழகததை மக்கள் மத்தியில கொண்டு போகவேண்டுமெனப் பேசுகிறார்கள். ஆனால், எனக்கு இந்தக் கருத்திலே உடன்பாடு இல்லை. ஏனெனில், மக்களைத்தான் பல்கலைக்கழகங்களை நோக்கிக் கொண்டுவரவேண்டும்.

இதற்காக வெளிநாடுகளிலே பல்கலைக்கழகங்களில் ஒரு நாள் "திறந்த நாள்" எனக் கொண்டாடுவார்கள். அப்போது பல்கலைக் கழகத்தின் சகல பகுதிகளுக்கும் பொதுமக்கள் அனைவரும் சென்று அங்கு நடைபெறும் செயற்பாடுகளைப் பார்வையிடமுடியும். ஆனால், அந்த நடைமுறை இங்கு இல்லை.

இதனாலேயே கண்காட்சி நிகழ்வுகள் போன்றவற்றை நடாத்தி மக்களுக்கு பல்கலைக்கழக செயற்பாடுகளைப் பார்வையிட வசதி செய்து கொடுக்கப்படுகிறது. எமது பீடத்தைப் பொறுத்தவரையில் 1995 ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்குப் பின்னால் இவவாறான கண்காட்சிகளை நடத்த முடியாமல் போய்விட்டது. ஆனால், இந்த வருடம் அவ்வாறானதொரு கண்காட்சி நிகழ்வை நடாத்தவுள்ளோம்.

எமது பல்கலைக் கழகத்தைப் பொறுத்தவரையிலே 1974 ஆம் ஆண்டிலிருந்து 1989 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதி ஒரு பொன்னான காலம். அப்போது தாராளமான நிதி இருந்தது. பாடத்துறைகளிலே புலமைபெற்ற பல தமிழ் விரிவுரையாளர்கள் இருந்தார்கள் ஆனால் இன்று அவ்வாறானோர் வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்தமையால் போதியளவு ஆசிரிய வளம் எம்மிடம் இல்லாமல் உள்ளது. இதனை நிவர்த்திசெய்யவேண்டும்.

இருந்தும் நாம் பல புதிய கல்வித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயற்படுத்தி வருகின்றோம். எதிர் காலத்திலே வளமான வேலை கொள்ளத்தக்க வலுவுடைய பட்டதாரிகளை எம்மால் உருவாக்கமுடியுமென நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் விஞ்ஞான வாரத்தை ஒட்டிய போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(94)

## விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி இம்முறையும் யாழ்ப்பாணத்தில்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் க.பொ.த உயர்தரப்பரீட்சையின் விடைத்தாள் மதிப்பிடும் பணி கடந்த வருடம்போல் இந்த வருடமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டின் முதலாம் கட்டப் பணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் யூன் மாதம் 5 ஆம் திகதி வரை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்த மதிப்பீட்டுப் பணியில் ஈடுபட இருக்கும் பரீட்சகர், உதவிப் பரீட்சகர்களுக்கான நியமனக் கடிதங்களை குறிப்பிட்ட பரீட்சகர்களுக்கு, தேசிய மதிப்பீட்டிற்கும் பரீட்சித்தலுக்கான சேவை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (58)

## திருத்தப்படாத வீதியில் போக்குவரத்து சிரமம்

(யாழ்ப்பாணம்)

கச்சேரி பேரின்பநாயகம் வீதி நெடுங்காலமாகத் திருத்தப்படாமல் உள்ளதால், அந்தப் பகுதி மக்கள் விசனமடைந்துள்ளனர்.

யாழ்.செயலகத்திற்கு அருகில் உள்ள மேற்படி வீதி, மிக மோசமாகச் சேதமடைந்து காணப்படுகிறது. இதனால், அந்த வீதியால் போக்குவரத்துச் செய்பவர்கள் பெரும் சிரமங்களை எதர்நோக்கி வருகின்றனர். மழைகாலங்களில் பெருமளவு நீர் தேங்கி நிற்பதால் இந்த வீதியால போக்குவரத்துச் செய்யமுடியாதுள்ளதாகவும், உயரதிகாரிகளின் வீடுகளை அண்டியுள்ள சில முக்கியத்துவம் குறைந்த வீதிகள் கூட திருத்தப்பட்டும், இந்த வீதி இதுவரை அதுவரை கவனிக்கப்படாதுள்ளதாகவும், கவலை தெரிவித்த இந்தப் பகுதி மக்கள் உரிய அதிகாரிகள் இது விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர். (55)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : க.அபிநயா
முகவரி : கோப்பாய் வடக்கு

இரண்டாவது அகவையில்



பெயர் : ஸ்ரீ.கௌசிகன்
முகவரி : வட்டுக்கோட்டை.

பத்தாவது அகவையில்



பெயர் : சு.விவேக்கா
முகவரி : மீசாலை வடக்கு.

பத்தாவது அகவையில்



பெயர் : வ.தக்ஷன்
முகவரி : கோண்டாவில்.


## சின்னஞ்சிறு செய்திகள்

### விவசாயப் பயிற்சி வகுப்பு

விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் திருநெல்வேலி ...பட்ட விவசாய பயிற்சிப் பாடசாலையில் நடாத்தப்பட்டுவரும் விவசாயிகளின் திறன் விருத்தி சம்பந்தமான பயிற்சி வகுப்புத்தொடர் நிகழ்வில், எதிர்வரும் 20, 21, 22 ஆம் திகதிகளில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கும், 24, 25, 26 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விவசாயிகளுக்கும் பழமரப் பயிர்ச்செய்கை தொடர்பான விளக்கமளிக்கும் வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. (101)

### கடற்றொழிலாளர்களுக்கு 3 கோடிரூபா ஒதுக்கீடு

'நிகொட்' உதவியில் - தாளையடி, ஆழியவளை மற்றும் பருத்தித் துறை கிழக்கு கடற்றொழில் பரிசோதகர் அலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளிலுள்ள கடற்றொழிலாளர்களுக்கு 3 கோடி ரூபா செலவில் உதவிகள் வழங்கப்படவுள்ளன. இந்தப் பகுதி மீனவர்களுக்கு கடற்றொழில் உபகரணங்கள் மீன்பிடி வள்ளங்கள், வலைகள், இயந்திரங்கள் போன்றவையே வழங்கப்படவுள்ளது.

'நிகொட்' உதவியிலான மேற்படி திட்டத்தை யு.என்.டி.பி. செயற்படுத்தவுள்ளது. (122)

### இலவச மாலைநேர வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணியில் உள்ள மழலைகள் மகிழ்வகத்தால் மாலை 3 மணியிலிருந்து 6 மணிவரை 6 வயதிலிருந்து 11 வயதிற்குட்பட்ட மாணவர்களுக்கான இலவச மாலை நேர வகுப்புக்கள் -மயிலணி மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டுவருகிறது.

இந்த வகுப்புகளில் மாணவர்களைப் பங்குபற்றிப் பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளது. (44)

### ட்றோலர் படகுகளை ஏலத்தில் விற்கத் தீர்மானம்

அண்மையில் இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்ட இந்திய மீனவர்களின் 14 றோலர் படகுகள் தற்போது வடமாகாணக் கடற்றொழிலாளர்களால் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி றோலர் படகுகளை விரைவில் ஏலத்தில் விடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (55)

### கோழிகள் திருட்டு

அரியாலை கனகரட்ணம் வீதியிலுள்ள வீடு ஒன்றில் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவுவேளை 15 இற்கும் மேற்பட்ட கோழிகள் திருட்டுப்போயுள்ளன.

இதேவேளை அரியாலை காந்தி சனசமூக நிலையத்தை அண்டியுள்ள இடங்களில் திருடர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படுவதால, இரவு வேளைகளில் அந்தப் பகுதிகளில் மக்கள் விழிப்புக் குழுவை அமைத்து, கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். (55)

### விஞ்ஞான பீடத்தில் கண்காட்சி நிகழ்வு

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட முப்பதாவது வருட நிறைவையொட்டி, கண்காட்சி நிகழ்வொன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ள இநதக் கண்காட்சி நிகழ்வில், பல பயனான விடயங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

பாடசாலைமாணவர்கள், மற்றும் பொதுமக்கள் எனப் பலருக்கும் உபயோகப்படத்தக்க வகையிலே இந்தக் கண்காட்சி நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்படவுள்ளன. நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் விஞ்ஞான பீடத்தில் இவ்வாறானதொரு கண்காட்சி நிகழ்வு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (94)

### கல்வளை பிள்ளையார் ஆலயத்தில் சின்னத்தம்பி புலவரின் சிலை

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தில் - கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவரின் சிலை ஸ்தம்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர் சிலை இருந்தபோதும் 1995 இல் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களால் சிலை உடைந்து போயிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (101)

### கலைப்பீட மாணவர்களுக்கான கலந்துரையாடல்

கலைப்பீட அனைத்து மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை 12 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதால், சகல மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### பளை நகரப் பகுதியில் காலாவதியான பொருட்கள் அழிப்பு

(ஆழியவளை)

பளை நகரப்பகுதியில் காலாவதியான உணவுப் பொருட்களை விற்பனை செய்யப்படுவது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் கண்டு பிடிக்கப்பட்டு உடனடியாக அந்தப் பொருட்கள் அழிக்கப்பட்டன.

பளை நகர்ப்பகுதியில் உள்ள குளிரகங்கள், உணவகங்கள், பல்பொருள் வாணிபங்கள் யாவற்றிலும் காலாவதியான பால்மா வகைகள் சொக்கலேற், பிஸ்கட் போன்ற உணவுப்பொருட்கள் பச்சிலைப் பள்ளி பொதுச்சுகாதாரப் பரிசோதகர் இராசதுரை, கண்டாவளைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் றிக்சிலி ஆகியோர் மேற்கொண்ட திடீர் நடவடிக்கையால் கண்டுபிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டன. (122)



உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் கல்லூரியின் நூல்நிலையத் திறப்பு விழாவின்போது கல்லூரி அதிபர் எஸ்.நடராசா உரையாற்றுவதையும், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம், ஓய்வுபெற்ற மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா, தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வேணுகோபால் ஆகியோரையும் படத்தில் காணலாம். (122)



நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவான கி.சிவனேசனுக்கான பாராட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பனை - தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தலைவர் தவராசா மங்கள விளக்கேற்றுவதையும், அருகில் விழா நாயகன் சிவனேசனையும் காணலாம். (91)




# கேள்வியும் நானே பதிலும் நானே

சிறுகதை





'அக்கா'...என்ற குரல்... சத்தம் கேட்டு அவள் பார்வை எப்படி சுகமா...? என்ற அடுத்த கேள்வி தொடரமுன்... விரக்தியான புன்னகை பதிலாகியது.

அவளது முகம்... துயரத்தின் படிமானத்தில் செறிந்திருந்தது. அவளது பார்வை வெறித்தபோது, வெறுமையின் கனம் எழுந்துகொண்டது. இழப்பின் பாதிப்பும் துயரின் சுமையும்... நிறைந்திருப்பது தெரிந்தது. வழக்கமான வார்த்தையில் கைகோர்த்து நிற்கும் கலகலப்பு நீண்ட தூரம் இடைவெளி... தடுப்போடு நிற்பது என்னால் அவதானிக்க முடிந்தது,

நான் அந்தவளவில் மெல்ல நடந்து அந்த மாமர நிழலில் போடப்பட்டிருந்த மரக்குற்றியில் அமர்ந்து கொண்டேன். என் பார்வை அந்தச் சூழலை வலம் வரத்தவறவில்லை. மாமர இலைச் சருகுகள் ஆங்காங்கே கூட்டம் போட்டு காற்றின் வரவால் தமக்குள் பேசிக்கொண்டன.

நந்தியாவெட்டையும் நித்தியகல்யாணியும் பூத்திருந்தது உண்மைதான். ஆனால், அவை நீருக்காய் அமைதியாக அழுவது போலிருந்தது. நீர் வார்த்து மொட்டவிழ்ந்து பூக்கும் அந்த ரோசாச் செடியும் நீரில்லா செடிகளாயின. அதுமட்டுமல்ல. அந்த ரோசாக்களை ஏதோ புழுக்கள் அரித்திருந்தது.

என் மனதையும், அக்கா நித்தியாவின் கணவன் இராகவனின் நினைவு அரித்துக் கொண்டிருந்தது. நித்தியாவைப் பார்க்கின்றேன் அவள் தேநீருடன் வந்தால். தேநீர் கைமாறியது.

வெறும் 'ரம்ளரை' அந்த மரக்குற்றியில் வைத்துவிட்டு மீண்டும் அவளைப் பார்க்கின்றேன். மனம் மௌனத்தில் நீண்டிருக்க... கண்களில் இருநது கண்ணீர் முத்தென உதிர்ந்தது. மனத்தில் எழுகின்ற சோக அதிர்வு அவனின் தோற்றத்திலும் மாற்றத்தை ஏற்படுத்தியிருந்ததை அவதானித்தேன்.

எதிர்பாராமல்... இராகவனுக்கு ஏற்பட்ட அந்த நிகழ்வு, நில நடுக்கத்தில் எற்பட்டபிளவு போல் அவ ளின் உள்ளம் மௌனமாக அழுதுகொண்டது. அவளின் அந்த சோகநினைவு என்னை ஆட்கொண்டது.

என் பார்வை... ஆத்மாவின் உட்பகுதியில் பதிந்தது நிழற்படமாய் அவள் புன்னகைத்தாள்.

'என்ன மச்சான் ராகவன்... இப்பிடிச் சிரிக்கிறாய்... நீ எப்பவுமே... சிரிச்சபடிதான் உனக்கு ஒரு கவலையும் இல்லையப்பா'

என் வார்த்தைக்கு அவன்சிரிப்புத்தான் பதிலாகியது.

'மச்சான் இராகவன்.... கொஞ்சம்... கவனமாயிரு... மத்தியானம் பிள்ளையளின்ர பக்கத்தால வந்தவன்... திரும்பவும் வரப்பாப்பான்.... இனி அவர்கள் வந்தாங்க ளென்டால்... என நான் வார்த்தையை முடிக்க முன்னர்... 'மதன்... அவங்கள் வந்தால். அவங்கடகதை அவ்வளவுதான் என தனது துப்பாக்கியைப் பார்த்தால்... அவள் நினைவுகள்... மெல்ல... மெல்ல... என் நினைவில் இருந்து கரைந்து போக... அக்கா நித்தியாவைப் பார்த்தேன்.

அவளையும் அவன் நினைவு அலைக்கழித்திட கண்களிலிருந்து கண்ணீர் முத்துக்கள். அவளைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"மதன்... நான்... இந்தத் துயரத்தை மறந்து வாழலாம் ஆனால், இவன் பிரதீப்பை நினைக்குமபோதுதான்... என்றவளின் வார்த்தை தொண்டைக்குள் சிக்கிக் கொள்ள.

அவள்... காலையில எழுந்து அம்மா... எங்கயம்மா... என்ற கேள்விக்கு.. அவளுக்கு என்ன பதிலை நான்சொல்லி சமாளிப்பது அவள் வார்த்தையில் இயலாமை... தெளிவாக முன்நின்று கொண்டது

"அக்கா... நீங்கள் ஏன் மீண்டும் மறுதிருமணம் செய்யக்கூடாது. இந்த உலகம் சம்பிரதாயம் சடங்குகள் பெண்ணியத்திற்கு விதிக்கப்பட்ட சட்டங்கள்... இவை எல்லாவற்றையும் மீறும் பெண்ணாக ஏன் மாறக்கூடாது... பெண்வாழ்வு துன்பியலும்.... வரையறையும் கொண்டதாகத்தான் அமையவேண்டுமா?"

என்ற பல கேள்விகள் என் மனதில் எழுந்துகொண்டிருக்கும்போது நான் அவளைப் பார்த்தேன்

"என்ன... மதன்... கனக்க யோசிக்கிறாய்... பிரதீப் வளர்ந்து... அவனுக்கு அப்பா... இல்லை என்ற தவிப்பும்... ஏக்கமும் அவன் வாழ்வியலைப் பாதிக்கக் கூடாது... என்றவள் மௌனமானாள்.

அவளிடம் என் எண்ணத்தை , வெளிப்படுத்தலாமா? அப்படி வெளிப்படுத்தினால் அதை அவளால் ஜீரணிக்க முடியுமா?

இல்லை... மதன்... நான்... இறுதிவரையும் அவர் நினைவுடனேயே... வாழ்ந்துவிட்டுப் போய்விடுவேன்

என்ற பதில்... என் மனதில் எழுந்த கேள்விக்கு பதிலாக கிடைக்குமா?

என பல... கேள்வியும்... பதிலும் என் மனதில் எழுந்து... கரைந்துகொண்டிருந்தது.

காலைப் பொழுதின் கிரணம்... மண்ணில் படர்ந்தது.

அக்கா... நான்... போட்டுவாறன் நேரம் போட்டுது...

**ரமணன்**

என்றபடி... நிமிர்ந்தேன்

தம்பி... மதன்... இந்த கார்த்திகை விளக்கீட்டுக்கு வநதிட்டுப்போ... அவருக்கு... சோறு படைக்கிறாள் வந்து சாப்பிட்டுப்போ.

ஓம்... அக்கா.... வந்திட்டுப் போறன் என திரும்பினேன்

மாமா... கட்டாயம்... வாங்கோ அம்மாவும் [illegible] வார்... எண்டு அம்மா சொன்னவ நீங்களும் வாங்[illegible]... என்றபடி தாயைப்பார்த்தான் பிரதீப்.

அவனின் பிஞ்சுமனம் நோகக்கூடாது என்பதில் நித்தியா அக்கா கவனமாய் இருக்கிறா... என்பதைப் புரிந்துகொண்ட நான்.

மெல்ல.... மெல்லமாக எழுந்து நடந்தேன்

மாமரத்திற்கும் பக்கத்தில் ஓர் முல்லைக்கொடி கொழுகொம்பு இல்லாமல் காற்றில் அசைந்தபடி இருந்ததை நான் கவனிக்கத் தவறவில்லை.

## கலீல் ஜிப்ரான்

**இலக்கிய உலகின் சிகரங்களைத் தொட்டவர் ஜிப்ரான் நம் ஈடு இணையற்ற சொல்லாற்றலால், காலத்தை வெல்லும் சொல்லோவியங்களைப் படைத்தளித்தார். கவிஞராய், கட்டுரையாளராய், கதாசிரியராய், நாவலாசிரியராய், ஓவியராய், சிற்பியாய், நாடக ஆசிரியராய்ப் பன்முகப் பரிமாணம் கொண்டு திகழ்ந்த ஜிப்ரானின் மனிதநேய நெஞ்சம் வானைப்போல் விசாலமானது. அவரது சமுதாயப்பார்வை தெளிவானதும், திட்டவட்டமானது, உறுதியானது. இந்த இருபதாம் நூற்றாண்டில், கலீல் ஜிப்ரானின் பாதிப்பிற்குள்ளாகாத படைப்பாளியே இல்லையென்றுதான். சொல்லவேண்டும். மகாஞானி ஓஷோவை மிகவும் பாதித்தவர் ஜிப்ரான்.**




இந்த உலகிற்கும் எதிர்கால உலகிற்கும் இடையில் உள்ள கணினி கவிஞன். தாகம் கொண்ட உயிரின் குடிக்கத்தவிக்கும் தூய சுனைநீர் கவிஞன். அழகாற்றின் நீரால் செழித்த மரம். பசியால் துடிக்கும் இதயங்களுக்கான கனி நிறைந்த மரம். தன் இனிய கானங்களால் மனம் செழித்த உயிர்களுக்கு உற்சாகமூட்டும் வானம்பாடி அவன். அடி வானத்தில் தோன்றி மேலும் கீழுமாய் வளர்ந்து வானத்தை நிறைக்கும் வெண்மேகம் அவன். அப்புறம் அது கீழ் நோக்கியிறங்கும் வாழ்க்கை வயல்மீது மழையாய் பொழிந்து மலர்களின் இதழ் திறந்து ஒளி புக வழிசெய்யும் அவன் ஒரு தேவன். தேவ செய்தி சொல்ல தேவியால் அனுப்பப்பட்டவன். அவன் ஓர் ஒளிவிளக்கு. இருளால்வெல்லமுடியாத விளக்கு. காற்றால் அணைக்கமுடியாத விளக்கு. அந்த விளக்கு நிரப்பப்பட்டிருப்பது, இஸ்தார் தேவியின் காதல் எண்ணெய். சங்கீத தேவி அந்த விளக்கை ஏற்றிவைத்தவள். கவிஞன் ஒரு தன்னந்தனியான ஆள். எளிமை, கருணைஆடைகள் அணிந்தவன். உற்சாகம்பெற இயற்கையின் மடியில் அமர்ந்திருப்பவன். இரவின் அமைதியால் காத்திருப்பவன். இறங்கிவரும் உயிர்ப்புக்காய் பார்த்திருப்பவன். பாசவயலில் தன் இதயத்தை விதைப்பவன். அதிலிருந்து மனிதகுலம் அறுவடை செய்துகொள்கிறது.

வாழும் நாளில் சமாதான மக்களால் புறக்கணிக்கப்படுபவன் - ஆம் அவன்தான் கவிஞன் இந்தப் பூமியிலிருந்து விடுதலை பெற்று சொர்க்கத் துறைமுகம் சேர்ந்ததும் மட்டுமே அடையாளம் காணப்படுபவன். அவன் மனித குலத்திடமிருந்து. கேட்பது ஒரு புன்முறுவல் மட்டுமே.

அவனது அழகிய கவிதைகளால் உலகம் நிறைவடைகின்றது. என்றாலும், அவனது பிரகாசத்தை மக்கள் ஏற்க மறுத்துவிடுகிறார்கள். எதுவரை மக்கள் தூங்கிக்கிடப்பார்கள்? சந்தர்ப்ப வசத்தால் மேன்மையடைந்தோரை எத்தனைகாலம் தூக்கிப்பிடித்துப் புகழ்ந்து கொண்டிருப்பார்கள்? தமது ஆன்ம அழகையும் காதலின் சமாதானத்தின் குறியீடுகளையும் காணவல்ல கவிஞனை எத்தனைகாலம் தான் இவர்கள் புறக்கணித்துக்கொண்டிருப்பார்கள்?

அறியாமையின் இருளில் அகப்பட்டவரை ஒளியின் பாதைக்கு இட்டுச்செல்ல தம்மையே மெழுகு வர்த்தியாய் எரித்துக்கொண்டு, கொடிய வறுமையில் வாடிக்கிடந்த நிகழ்கால கவிஞனை மதிக்கத்தெரியாமல் எத்தனை காலம் இவர்கள் செத்தவரைப் புகழ்ந்துகொண்டிருப்பார்கள்.

கவிஞனே நீயே இந்த வாழ்வின் வாழ்வு - எவ்வளவு கொடுமையான காலங்களையும் வென்றுயாந்தவன் நீ. உனது பேரரசுக்கு அழிவேயில்லை கவிஞனே உனது முள்கிரீடத்தை சோதித்துப்பார். அதற்குள் மறைந்திருப்பவை என்றும் வாடாத புன்னைமரக் கொளுந்துகள்.

**(கலில் ஜிப்ரானின் 'பொன் மணிப்புதையல' எனும் நூலில் இருந்து ஒரு பகுதி இதுவாகும்.)**

**தமிழாக்கம் : கவிஞர் புவியரசு.**

# சினிமா சில பதிவுகள்

நவீன விஞ்ஞானம் தந்த வரப்பிரசாதம் சினிமா. இந்தச் சினிமா ஹொலிவூட்டிலிருந்து, கோடம்பாக்கம் வரை கொச்சைப் படுத்தப்பட்டுச் சீரழிந்து கிடக்கிறது. பணத்தை முதன்மைப்படுத்தும் வர்த்தக மனோபாவம் இச்சீரழிவுக்கு முதன்மையான காரணமாகும். பல சமரசங்களுடன் குப்பை கொட்டுவதே சினிமா என்றாகிவிட்டது. சினிமாவை ஆக்கரீதியாக வளர்த்தெடுக்க, அதற்கு ஒரு குணத்தைக் கொடுக்க இயங்க இந்தச்சினிமா வியாபாரிகளால் எந்தச் சந்தர்ப்பத்திலும் முடிவதில்லை.

புறநடையாக சில மேதமை மிக்க கலைஞர்கள் மனிதனை, அவன் உறவுகளை, முரண்களை அவனது வாழ்வின் வியத்தகு கணங்களை அவன் பற்றி நிற்கும் மண்ணின் மணத்துடன் கலையாக்கிவிடுவது அற்புதமான விஷயந்தான்.

நல்லதை ரசிப்பவர்களான, கலை உபாசகர்களை - திரைப்படமேதைகளான சத்தியஜித்ரே, அகிரா குரோசாவா, ஜசன்ஸ்ரைன், அந்த்ரே வாஜ்தா, ஷியாம் பெனகல், மிரினாளசென், ஹாலிட் சித்திக், சொல்டன் .:.பாப்ரி, செம்பேன் உஸ்மான், புத்ததேவ் தாஸ்குப்தா, அ டூர்,கோபாலகிருஷ்ணன், அபர்ணா சென்றோமன் பொலன்ஸ்கி, லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் போன்றோரின் பரிச்சயமின்மை - வறியவர்களாக்கிவிடும். இந்நிலை நீங்கும் வகையில் - பல நடைமுறைச் சிக்கல்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டபோதும் - யாழ்.பல்கலைக்கழகத்தில் இயங்கிவரும் புறநிலை படிப்புகள் அலகு நன்முறையில் செயற்படுகிறது.

அவர்கள் காட்சிப்படுத்தும் திரைப்படங்கள் வீடியோ திரைப்படங்களாக இருந்தபோதும் பயனுடையவை. ஏறக்குறைய மூன்றுவருடங்களுக்கு மேலாகத் தொடரும் அவர்களது இப்பணி பாராட்டப்படவேண்டிய ஒன்றாகும்.

உலகத்தின் தலைசிறந்த படங்கள் அனைத்தையும் இவர்களால் காட்ட முடியாவிட்டாலும், அப்படிக் காட்டுவது கூடச் சாத்தியமில்லாத ஒன்றுதான். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் சில நல்ல படங்களை இவர்களால் காட்ட முடிந்திருக்கின்றது. உதாரணமாகச் சில, பதர் பாஞ்சாலி, அகன்துக், அபராஜிதோ, சத்கதி, த செஸ் பிளேயர்ஸ், மந்தன், மம்மூ, சுபைதா, பராமா, தேசாடனம், பயங்கரவாதி, கம்பெரலிய, சருங்கல, அஸ்வசும, மே மகே சந்த, சமனல விலாபய, பியானோ வாசிப்பவன் (Pianist), பேர்னாடா அல்பாவின் வீடு, கரும்பலகைகள், டான்ஸ் ஒவ்த விண்ட், தபாற்காரன், லரீஷா

இன்னும் சில திரைப்படங்களின் பெயர்களைக் கூடத்தரமுடியும்.

பார்த்த படங்கள் எல்லாவற்றையும் பற்றி எனது அபிப்பிராயங்களை இச்சிறு கட்டுரையில் குறிப்பிட்டு விடமுடியாது. பியானோ வாசிப்பவன் (ஆங்கிலம்), காற்றினது நடனம் (ஹிந்தி) ஆகிய படங்களைப் பற்றிச் சிறிது பார்ப்போம். பொதுவாக இப்படங்கள் இரண்டுமே பார்வையாளனது அடிமன உணர்வுகளை அலைக்கழிப்பதுடன் மனித உணர்வுகளையும், உறவுகளையும், அவர்தம் வாழ்வோட்டத்துடனான எத்தனங்களையும் - சினிமா எனும் ஊடகத்தின் அசாத்திய புரிதலுடன் அழகாகப் பதிவு செய்துள்ளன.

### பியானோ வாசிப்பவன்

பியானோ வாசிப்பவன் எனும் இவ் ஆங்கிலத்திரைப்படம் போலந்து நாட்டு இயக்குநர் றோமன் பொலன்ஸ்கி அவர்களால் உருவாக்கப்பட்டது. யுத்தத்தின் கொடுமையை உணர்த்தும் படங்கள் பல வந்துள்ளன. அந்த வரிசையில் வந்த இப்படம் - ஜேர்மனியப் படை, போலந்து நாட்டை ஆக்கிரமித்த பொழுது அங்கு இடம்பெற்ற அழிவையும் மக்கள் அவலத்தையும் - அத்துடன் பியானோ வாசிக்கும் மென்மையான கலைஞன் ஒருவனின் உயிர் வாழ்தலுக்கான இயக்கத்தையும் இடரையும் மயிர்க்கூச்செறியும் வகையில் பதிவு செய்கின்றது.

துல்லியமான, மூர்க்கமான சினிமா மொழியில் சித்திரிக்கப்படும் இத்திரைப்படம் பார்வையாளனது மனதின் உள் இழைகளையும் உணர்வுத் தளங்களையும் உசுப்பிவிடுகிறது. சுதந்திரமற்ற மனித வேதனையை, துன்பத்தை, துயரத்தை சட்டகங்களில் (FRAMES) தரிசிக்கும் பார்வையாளன் உறைந்து போகும் அனுபவத்தைப் பெறுகின்றான்.

போர்ச்சூழலில் வாழும் நாம் - நமது இன்னல்கள், அவலங்களை மிக நெருக்கத்தில் பரிசீலனை செய்ய இத்திரைப்படம் பெருமளவு உதவுகிறது.

ஜேர்மனியப் படையால் ஆக்கிரமிப்புக்குள்ளாகும் போலந்து தேசம் அதில் அவல



முறும் யூத இனமக்கள், அவர் தம் இடப்பெயர்ச்சி, நாடுகடத்தல்கள், சிறுகாரணங்களுக்காகவே சுடப்பட்டு மரணிக்கும் மனித துயரம் என்பன படம் முழுவதும் பரவிக்கிடக்கின்றன. இவையாவும் பார்வையாளனது பரிவைக் கோரும் வகையில் - உன்னதமான காட்சிப் படிமங்களாக படத்தில் பதிவாகியுள்ளன.

இந்த இக்கட்டான பொழுதுகளில் கூட பியானோ மீதான காதல், பிரியத்தை பியானோ வாசிப்பவன் இழந்துவிடவில்லை. அவன் காற்றுவெளியில் கைகளைப் பயன்படுத்தி வாசித்து மகிழ்வதைக் காட்டுவதன் மூலம் இவ்வுணர்வு படத்தில் வெளிக்கொணரப் படுகிறது.

**க.சட்டநாதன்**

ரஷ்யப்படையின் வருகையுடன், போலந்து தேசம் ஜேர்மனியர்களிடமிருந்து விடுவிக்கப்படுகிறது. போலந்து தேசிய வானொலியில் படத்தின் நாயகனது பியானோ இசை நிரவலுடன் படம் நிறைவடைகிறது. நல்ல படம்.

### காற்றினது நடனம்:

சாஸ்திரீய சங்கீதத்தின் விகசிப்பை, புதுடெல்லி நகரத்தின் பின்புலத்தை அழகாக, துல்லியமாக - ஒரு தெய்வீகத்தன்மையுடனும், மாயத்தன்மையுடனும் - படமாக்கியிருக்கிறார் ராஜன் கோசா அவர்கள். பண்டைய சங்கீதத்தின் இனிமையும் கலாசாரச் செறிவும் படம் முழுமையும் வாசமும் வண்ணமும் மிக்க மென்மலர்க் குவியலாய்ச் சிதறிக்கிடக்கின்றன.

இளம் பாடகியான 'பல்லவி' சங்கீத உலகில் நாலு பேர் மதிகத் கூடிய பாடகி. அவளது இசைப்பயணம் தாயும் குருவுமான கருணாதேவியின் மரணத்துடன் திடீரெனத் தடைப்பட்டுவிடுகிறது. அவளது குரலையும் இழந்துவிடுகிறாள். பாடமுடியாத அவலம் அவளை அலைக்கழிக்கிறது. அவள் சங்கீதத்தை இழந்து சமூக அந்தஸ்தை இழந்து நடைப்பிணமாகப் போனதற்கு தாயின் மரணம் மட்டும் காரணமல்ல. அவள் விருப்புடன் பாடும் மதுவந்தி இராகத்தை இசை விமர்சகரான தக்கார் "ஆன்மா இல்லாத இசைக்கோலம்" எனக் கூறியதும் காரணமாகிவிடுகிறது. தனது குரல் வளத்தின் போதாமையை உணரும் அவள் தெருவோரச் சிறுமி ஒருத்தியின் இசையில் மயங்கி 'இந்தக் குரல் எனக்கு வாய்த்தால்...' எனப் புலம்பியபடி அவள் பின்னால் பிச்சியாய் இழுபடுகின்றாள். சிறுமியின் கனவில் இசை கற்றுத் தரும் பாபாவே இவளுக்கும் குருவாகி விடுவதுடன், அவளுடைய வாக்கே வேதவாக்காக இவளால் கொள்ளப்படுகின்றது. அவரை அணுகிய இவளது கேள்வி:

"எனது குருவின் குரலைக் கேட்க விரும்புகின்றேன்..."

"மௌனமே உன்னைப் பாடவைக்கும். நீ இன்னும் அதிகம் தேடவேண்டுமா? உன் தேடலை விட்டுவிடு, அப்பொழுதுதான் சங்கீதம் உன்னை வந்தடையும்..."

மௌனமாகவே தனது கருத்தை எழுத்தின் மூலம் உணர்த்தும் அவர் அவளது கரத்தை ஞானச் செருக்குடன் தொடுகின்றார். அந்த ஸ்பரிசம் - தொடுகை உணர்வு அவள் இழந்ததையெல்லாம் அவளுக்கு மீட்டுத்தந்துவிடுகின்றது.

அளவான உரையாடலைக் கொண்ட இப்படத்தில் காட்சிப்படங்கள் கவிதையாகி விடுவது படத்தின் சிறப்பம்சமாகும். இப்படம் 1997 ஆம் ஆண்டு இலண்டன் திரைப்பட விழாவில் பார்வையாளருக்கான விருதினைப் பெற்றுள்ளது.

இவற்றுடன் இங்கு வேறு சிலதும் எனக்குச் சொல்லவேண்டும் போல இருக்கிறது. இத்திரைப்படங்களை இலவசமாகப் பலரும் பார்க்க வாய்ப்பிருந்தும் மிகச் சில பார்வையாளர்களே வந்து பார்ப்பது மிகுந்த விசனமளிக்கின்றது. குறைந்தது - அவையடக்கம் ஏதுமில்லாததும், எழுத்தின் பெருமையைத் தாமே 'தம்பட்டம் அடிக்கும்' இந்தப் பேனா பிடிக்கும் பிரம்மாக்களாவது பார்க்கலாமே? துல்லியமும் அனுபவச் செழுமையுமில்லாது குறைபிண்டங்களையே பிரசவிக்கும் இவர்கள், இந்த மகத்தான காட்சி ஊடகத்தை பரிச்சயப்படுத்திக் கொள்ளக்கூடாதா?

புறநிலைப் படிப்புகள் அலகின் முயற்சியில் திரையிடப்படும் இத்திரைப்படங்கள், ஒருவகையில் நிஜ உலகத்திலிருந்து தப்பியோடும், பாமரத்தனமான மகிழ்ச்சியை மட்டுமே சனங்களுக்குத் தரும். வர்த்தக சினிமாக்களின் பதிலிகள் அல்லது மாற்றுச் சினிமாக்கள் எனக்கூறலாம். இம்முயற்சி ஒரு சிறியளவிலாவது பார்வையாளர்களிடத்து ஒரு விழிப்புணர்ச்சியை. வித்தியாசமாக சிந்திக்கும் ரசிப்புத்திறனை உருவாக்க வேண்டும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஞாயிறு தோறும் கிடைக்கும் இந்த அரிய சந்தர்ப்பத்தை, நாம் அனைவரும் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்!

நன்றி:
இதழ் தெரிதல்
( மாசி - பங்குனி 2004)

# அன்னை...



மூன்னூறு நாள் சுமந்து
ஆயுளுக்கும் உணர்வூட்டி
முழுமை காணா உறவே!

உயிர்தந்து - எனக்காக
தனை தந்து
பூமியில் நடமாடும் தெய்வமே!

கூடிவரும் வினைகள்
நொடியில் அகன்றிட - எனை
அணைக்கும் அன்னையே!

என் வெற்றிகளின் பின்னே
விழித்துக் கொண்டிருக்கும்
உத்தமியே!

வேண்டுகிறேன்
நாளுமுன் அன்பு
வேண்டாம் - இனி
உனை நீங்கிய பிறப்பு!

வி.வித்தியா

# பேசு



சிலர் ஏன் பேசவேண்டாததை
எல்லாம் பேசிப் பேசியே
மற்றவர்களை
இம்சிக்கின்றார்கள்?

இன்னும் சிலர் பேசவேண்டியதை
பேசாமல் தங்களை ஏமாற்றிக்
கொள்கின்றார்கள்!

சிலருக்கு மனசிருக்கும் வானம்
போல
வார்த்தை இராது,
மௌனயுத்தம் நடத்தியே
மற்றவர்களை
கொன்றுவிடுவார்கள்

தனிமையையும் வெறுமையையும்
விரட்ட - நீ
பேசத்தான் வேண்டும்!
வேண்டியதை வேண்டிய
நேரத்தில்
எப்போதுமல்ல.

மானஸா

# மறக்குமா இதயம்

காலங்கள் போகலாம்
காயங்கள் மாறலாம்
அக்காயம் மூலம் ஏற்பட்ட
வடுக்கள் மட்டும் அழியாது
'தும்பிகள்' போல் பல்வகை
விமானங்கள் வட்டமிட
'எறும்புகள்' போல் நாம்
அங்குமிங்கும் ஓடி ஒளிய,
ஒளிந்தவர்களை எல்லாம்
தேடித்தேடி குண்டுவீச
ஓங்கி நின்ற வீடுகள்
யாவும் தரைமட்டமாக
துப்பாக்கி குண்டுகள்
காதைப் பிளக்க
அலறல் சத்தங்கள்
ஓங்கி ஒலிக்க
இருபத்து நான்கு குழல்
இடிபோல் முழங்க
இருக்க இடமேதுமின்றி
துரத்தியடிக்கப்பட
ஆயன் இல்லா 'ஆடுகளாய்
இடம்பெயர்ந்து! அகதிகளானோம்
இவற்றையெல்லாம்
மறக்குமா இதயம்?
இதையெல்லாம் மீண்டும்
நினைக்குமா இதயம்?

எற.நிசாந்தன்

# இலக்கிய முத்து

அவனின்றி அணுவும் அசையாது. ஆனால், இவனோ அண்டசராசரங்களையெல்லாம் அமைத்த ஆண்டவனையே அசைத்துப் பார்ப்பவன். கடவுள் மனிதனைப் படைத்தானா? மனிதன் கடவுளைப் படைத்தானா? என நாத்தீகம் பேசுபவன் அல்ல அவன். ஆண்டவன் தான் அண்டசராசரங்களின் தலைவன் என்பான். மறுகணமே அதை மறுதலிப்பான். ஆனால், பிரமை பிடித்தவனு மல்ல. படைத்த பரமனுக்கே புரியாத புதிர் அவன்.

## வீதியுலா வருகிறார்...!

இவன் வேறுயாருமல்ல. நிந் தாஸ்துதியால் தனக்கெனவே தனியிடம் பிடித்த வசை பாடக் காளமேகம் எனவல்லோர் போற்றும் நாயக்கர் கால ஆசுகவி. உள்ளதை உள்ளபடி உணர்த்துபவனே உண்மைக் கவிஞன். ஆனால், இவன் உள்ளதை உள்ளபடி சொல்லுவதற்கப்பால் உள்ளொன்று வைத்துக் கவிபாடும் ஆற்றல் அமையப்பெற்றவன். அடிமைமுதல் ஆண்டவன் ஈறாக தன் சொல்வன்மையால் தீண்டிப் பார்ப்பது அவனது பொழுதுபோக்கு.

அன்றும் அப்படித்தான் ஆசுகவி காளமேகம் நடக்கின்றான். அவன் முன்னே இரு உருவங்கள். அவர்கள் கைகளில் காணப்படும் தட்டங்கள் காணிக்கைக்காக என்பது காளமேகத்திற்குப் புரிகின்றது. ஏதோ தெய்வத்தின் உற்சவ பவனி என உணர்ந்த காளமேகம் பார்வையைச் சற்று அகலப்படுத்துகின்றான். அழகியதொரு யானையில் அமர்த்தி வைக்கப்பட்டுள்ளது. ஆலகால விசமுண்ட பரமசிவனது சிலை. ஆலவட்டத்தினை ஒருவர் பிடிக்க, மேளம் முழங்க, நாதஸ்வரத்தினின்று பிறக்கும் இனிய ஓசை பக்திப் பரவசமூட்ட ராஜாங்கம் நடத்தும், மன்னன் மந்திரிகள் சூழப் பவனிவருவது போன்று பக்தர்கள் புடைசூழ வீதியுலா வருகிறார் ஆதிசிவன்.

ஆதிசிவன் வீதியுலா வருவதைப் பார்த்த கவி உள்ளம், அழகாகச் சிந்திக்கின்றது. பார்போற்றும் பரமசிவனைப் பார்த்து பல வினாக்களைத் தொடுக்கின்றான் காளமேகம்.

பட அரவினை கழுத்தில் மாலையாக அணிந்த பரமசிவனே, தேவரீர் நீர் பிச்சை எடுப்பதற்காக வீதியுலா வரும் காட்சியேதனி அழகு. ஆதிசிவனே யாசிக்கப் புறப்படும் நீர் அமர்ந்து செல்ல அழகியதோர் யானை அவசியந்தானா? இரந்துண்ணச் செல்லும் உமக்கு நாதஸ்வர ஓசையும், நானிலத்தையே அதிரவைக்கும் மேளமும் தேவைதானா? நாடாளும் மன்னன் மந்திரிகள் புடைசூழ வீதியுலா வருவதைப்போன்று யாசிக்கப் புறப்படுகின்றீரே என பரமசிவனையே பரிகசித்துவிட்டுச் செல்கின்றான்.

'நச்சரவம் பூண்டதில்லை. நாதரே தேவரீர்
பிச்சையெடுத் துண்ணப் புறப்பட்டும் - உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்கடல்போற் றான்முழங்கும்
மேளமேன் ராஜாங்க மேன். (காளமேகம்)

லெஸ்லி

சர்வதேச அரசியல்

கே.ரீ.கணேசலிங்கம்

# இந்தியாவின் புதிய 'விதேசிய' பிரதம மந்திரியும் காங்கிரஸ் எதிர்நோக்கவுள்ள பிரச்சினைகளும்

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் காங்கிரஸ் கட்சியின் தலைமையிலான கூட்டணியை ஆட்சியில் அமர்த்தியுள்ளது. ஐந்து ஆண்டுகள் பாரதீய ஜனதா கூட்டணி மேற்கொண்ட ஆட்சியை நிராகரித்த இந்திய மக்கள், தமது பாரம்பரியக் கட்சியான காங்கிரஸ்சை மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளனர். மேலோட்டமாக அவதானித்தால் அவ்வாறான முடிவுக்கே யாராலும் வரமுடியும். ஆனால் பாரதீய ஜனதாவும், காங்ஸூம் தனித்து ஆட்சிக்குப் போட்டியிடவில்லை. மாறாக பிராந்தியக் கட்சிகளைச் சேர்த்துக் கொண்டே தேர்தலில் குதித்திருந்தன. ஆதனால தனிக்கட்சி அரசியலுக்கான போட்டியை விட கூட்டணி அமைப்பதற்கான வியூகமே தேர்தலின் வெற்றியை நிர்ணயித்தது. அத்தோடு பிராந்தியக் கட்சிகளின் ஆட்சியில் ஏற்பட்ட பாதக பாதகத்தன்மைகள் நடந்து முடிந்த தேர்தலில் பரதிபலித்தது. எனவே பாரதீய ஜனதாவுக்கான தோல்வியாகவோ, காங்கிரஸ் கட்சிக்கான வெற்றியாகக் கொள்வதைவிட கூட்டுக்கட்சிகளின் அல்லது பிராந்தியக் கட்சிகளின் வெற்றியாகவே இதனைக் கொள்ளமுடியும். தேசியக் கட்சிகளுக்கு நிகராகப் பிராந்தியக்கட்சிகளும் தேர்தலில அதிக ஆசனங்களை வென்றிருப்பதுடன் இடதுசாரிக் கட்சிகள் கணிசமான வெற்றி வாய்ப்பை இத்தேர்தலில் பெற்றுள்ளனர். இது பொருளாதார அடிப்படையில் ஏற்பட்ட மாற்றமாகக்கூட அளவீடு செய்யலாம்.

ஏனெனில் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாடு ஆகிய மூன்று தென் மாநிலங்களிலும் ஆட்சியிலிருந்த மாநில அரசுகள் தோல்வியடைந்துள்ளன. இந்தமூன்று மாநில அரசுகளும் நவீன தொழில்நுட்ப மற்றும் தகவல் புரட்சியினூடாக புதிய உருவாக்கத்தை இந்த மாநிலங்களில் ஏற்படுத்தப் போட்டியிட்டன. அதன்படி வறிய மக்களும், கல்வியறிவற்றவர்களும், பாரம்பரிய உற்பத்தியோடு வாழ்ந்தவர்களும் இத்தகைய பொருளாதாரக் கொள்கையால் பொரும்பாதிப்பை அடைந்தனர். இதே கொள்கையைக் கொண்டே பாரதீய ஜனதாவும் முழு இந்தியாவையும் தகவல் தொழில்நுட்பப் பொருளாதார தேசமாக மாற்றமுயன்றது. இந்திய மக்கள் தொகையில் ஏறக்குறைய 70 சதவீதம் கிராமப்புறத்தை அண்டி வாழ்பவர்கள். எனவே பாரதீய ஜனதாவின் பொருளாதாரக் கொள்கைகளால் அவர்கள் எந்தப் பயனையும் அடையவில்லை. இதன் பிரதிபலிப்பாகவே இடதுசாரிகள் மீண்டும் உயிரூட்டப்பட்டுள்ளனர்.

ஆனால் இவையாவற்றையும் விட அதிர்ச்சிகரமான சம்பவம் ஒன்று இந்தியத் 'சுதேசிகளுக்கு' ஏற்பட்டுள்ளது. அது காங்கிரஸ் கூட்டணியின் பிரதம வேட்பாளராக சோனியாகாந்தி தேர்ந்தெடுக்கப்பட்டதாகும். நூறு கோடிக்கு அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட இந்தியாவில் ஒரு நூற்றுக்கான ஆண்டுகள் பழமையான காங்கிரஸ் கட்சியினால் சுதேச வேட்பாளர் ஒருவரைப் பிரதமராக நிறுத்த முடியவில்லை. இதைவிட இந்தியர்கள் இழப்பதற்கு உலகத்தில் வேறு எதுவுமில்லை.

இந்தியர்கள் வாய்சவடால் பேர்வழிகளாகத் தான் காணப்படுகிறார்களே அன்றி 'சுதேச' யதார்த்ததைப்புரிந்துகொண்டு, தமது பாரதத்தைப் பாதுகாக்க முடியாதவர்களாக உள்ளனர்.



மகாத்மா காந்தியின் அந்நிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டமும் அதன விளைவுகளும் அவரது வாரிசுகளாலேயே காட்டிக் கொடுக்கப்பட்டுவிட்டது. காந்தியின் அந்நிய எதிர்ப்பு வாதங்களையும் தம் உணர்வுகளாக்கி போராடிய பாரதம் இன்று இத்தாலிய பெண்ணால் ஆளப்படும் துயரநிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது.

இந்தியாவுக்கும், இந்தியர்களுக்கும் இந்திய பார்ப்பணீயக் கொள்கைக்கும் இது ஒரு சம்மட்டி அடியாகும். என்றுமே மீளமுடியாத துயரத்தைச் சோனியாவின் வருகை ஏற்படுத்தியுள்ளது. வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாத கதையாக இந்தச் சம்பவம் அமைந்துவிட்டது. இது இந்தியா தனது அண்டை நாடுகள் மீதும், இனங்கள் மீதும் ஏற்படுத்தும் சீண்டல்களுக்கும் தலையீடுகளுக்கும் தகுந்த பதிலாக அமையும். உங்கள் தேசத்தை நீங்களே ஆளமுடியாத நிலை, பிறர் மீது எப்படி ஆட்சியுரிமையைத் திணிக்கமுடியும் என்ற கேள்விக்குப் பாரதமே இலக்காகிவிட்டது.

இந்தத் தேர்தலின் பின் அமையவுள்ள புதிய காங்கிரஸ் அரசுக்கும் விதேசிய பிரதமருககும் அதிக சவால்கள் உண்டு என்பதை மறுக்க முடியாது. பாரதீய ஜனதா மேற்கொண்டு வந்த பொருளாதாரக் கொள்கை, வெளிநாட்டுக் கொள்கை இரண்டுமே அதிக ஆபத்து மிக்க விடயங்களாகும். காங்கிரஸுன் ஆட்சிக்காலத்தில் குறிப்பாக நரசிம்மராவின் ஆட்சியின்போது ஏற்படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்திருத்தங்களையே பாரதீய ஜனதா அமுல்படுத்தி வந்தது. இத்தகைய பொருளாதாரக் கொள்கைக்கு வித்திட்டவர் சோனியாவின் கணவரான ரஜீவ் காந்தி என்பதை மறுக்கமுடியாது. அத்தகை கொள்கைக்கே பாரதீய ஜனதாவுக்கு இத்தகைய விமர்சனம் என்றால். (தேர்தல் முடிவுகள்) காங்கிரஸின் அடுத்தகட்ட அமுலாக்கல் பொருளாதாரக் கொள்கை எப்படியானதாக அமைப்போகின்றதோ? அத்துடன் காங்கிரஸ் ஆட்சியை கைவிட்டபின்பு உலகத்தின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்கள் கணிசமான பொருளாதார வீச்சு எல்லையை இந்தியாவுக்கு அதிகரித்துள்ளது. அந்த நிலையிலேயே காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துள்ளது. அதாவது, பாரதீய ஜனதா அமுலாக்கிய பொருளாதாரக் கொள்கைகளைக் காங்கிரஸ் நிராகரிக்கக்கூடிய உலக சூழல் தற்போது இல்லை என்பதே பிரதான சவாலாகும். இந்தச் சவாலை முறியடிக்க காங்கிரஸ் எப்படி முயலும் என்பதுடன், இடதுசாரிகளே காங்கிரஸ் ஆட்சியின் பக்கபலமெனக் கூறப்படுவது யதார்த்தமாக அமையுமாயின் அதனை மீறாமல் பேண நினைப்பதும் கடினமாகும். சில வேளைகளில் இடதுசாரிகள் தாங்கள் அணிந்திருக்கும் அனைத்துக் கொள்கைகளையும் களைந்தெறிந்துள்ளது போல் தேர்தல் வாக்குறுதியையும் கைவிடுவார்களாயின் காங்கிரஸ் தப்பிப் பிழைத்துவிடும். ஒன்றில் காங்கிரஸ் காப்பாற்றப்படும் அல்லது இடதுசாரிகள் காப்பாற்றப்படவேண்டும். இடது சாரிகள் நிர்வாணமாக்க படுவார்களாயின் அடுத்துவரும் இது தசாப்தங்களுக்கு நாடாளுமன்றம் செல்ல முடியாத நிலை ஏற்படும்.

அடுத்து வெளிநாட்டுக் கொள்கை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையாகும். இந்தியாவின் வெளிநாட்டுக் கொள்கை வேகமாக மாறுவதில்லை. அது உருவாக்கியுள்ள நிரந்தரமான நிலையியல் குழுவின் வெளிநாட்டுக் கொள்கையே காலம் காலமாக பின்பற்றப்பட்டு வருகின்றது. அத்தகைய கொள்கையை சோனியாவோ காங்கிரசோ மாற்றிவிடமுடியாது. அப்படியாயின் பாரதீய ஜனதாவை நிராகரித்த மக்கள் காங்கிரஸால் ஏமாற்றப்படப்போகிறார்கள். அதே வெளிநாட்டுக் கொள்கையைப் பின்பற்றினால் பாரதீய ஜனதாவின் பொருளாதார, வர்த்தக, கொள்கையுடன் ராஜீக உறவுகளும் இராணுவத் தொடர்புகளும் தொடர்ந்து பேணப்படும். அப்படியாயின் இந்த ஆட்சி மாற்றத்தால் இநதிய மக்களுக்கு என்ன கிடைக்கப்போகின்றது?

மகாத்மாகாந்தியை சுட்ட கோட்சே நீதிமன்றத்தில் கூறிய வார்த்தைகள் இங்கு நினைவுகூரத்தக்கது. காந்தி இல்லாத இந்திய அரசியல் நிச்சயமாக காரிய சித்தியடையாதாகவும், எதிரடி கொடுக்கக்கூடியதாகவும் ஆயுதபடைகளைக் கொண்ட சக்திமிக்கதாகவும் இருக்கும் என்பதை நான் உணர்வேன்... மக்கள் என்னை அறிவற்றவன் அல்லது முட்டாள் என்று அழைக்கவோ பட்டம் சூட்டவோ கூடும். ஆனால் வலுவான தேச நிர்மாணத்திற்கு அவசியமானது என்று நான் கருதுகின்ற அறிவின் மீது எழுதப்பட்ட பாதையைப் பின்பற்றுவதற்கு நம்தேசத்திற்கு சுதந்திரமிருக்கும்.

அத்தகைய தேச நிர்மாணமும் சுதந்திரமும் இதுவரை ஆட்சி செய்த எந்த அரசாங்கத்தாலும் இந்திய மக்களுக்குக் கொடுக்க முடியவில்லை என்பதை யாரும் நிராகரிக்க முடியாது. 1948 ஆம் ஆண்டுகளில் கோட்சேயால் எழுப்பப்பட்ட வினாவுக்கு விடைகாண முடியாத இந்திய சுதேசியம் எப்படி விதேசிய அரசியல் தலைமையால் சாத்தியப்படப் போகின்றது? உலகத்தில் எழுந்துள்ள போட்டித் தன்மைக்கு முன்னால் இந்தியாவின் விதேசிய தலைமையால் எதனையும் சாதிக்க முடியுமா? உலகப் பொருளாதாரச் சவாலுக்கும், வல்லரசுப் போட்டிகளுக்கும் முன்னால் இந்தியாவைப்பற்றிய ஆசியாவின் கனவையும் சோனியாகாந்தியின் அரசியல் தலைமை நனவாக்கவேண்டியுள்ளன.

எனவே - தென்னாசியா முழுவதும் ஆதிக்கத்தையும் தலையீட்டையும் செய்துவிடும் இந்திய சுதேசியம் இந்தியாவின் ஆளும் பலத்தைத் தக்கவைக்க முடியவில்லை என்பதே இந்தியர்களின் துயரமாகும். ❁

---

சமகால அரசியல் ஆய்வு பகுதி - 3 மு.திருநாவுக்கரசு

# யாப்பு சிறப்பாக செயற்படுவதற்கு ஒரு அரசியல் கலாசாரம் தேவை...



**9.5.2004 அன்று நாவலர் கலாசார மண்டபத்தில் மு.திருநாவுக்கரசு - சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆற்றிய உரையிலிருந்து...**

பொருளாதார முறைமை பொருளாதாரமாக இருக்கும்போது, அரசியல் எல்லைகளைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

இதைத்தான் நான் உலகளாவிய ஒரு புதிய கட்டம் என்று கூறினேன். உலக அளவில் - உலக அரசியல், பொருளாதாரமானது ஒரு எல்லையைக்கொண்ட பொருளாதாரமாக மாறியுள்ள கட்டத்தில், அந்த ஒரு எல்லையின் கீழ் அரசியல் சிந்திக்கப்படுகின்ற ஒரு யுகத்துக்குள் நாம் கால் வைத்துவிட்டோம். நாம் எழுதப்பட்ட சட்டங்களுக்கூடாகவும், வரையப்பட்ட யாப்புகளுக்கு ஊடாகவும் அரசியலை நடத்துகின்ற ஒரு தவறான பாதையை, தவறான அரசியல் விளக்கத்தினை எப்பொழுதும் வைத்திருக்கின்றோம். அதற்கு மாறாக நடந்து சென்ற யாப்புகளுக்கூடாக வாழ்ந்துகொண்டு இருக்கும் அரசியல் நிகழ்வுகளுக்கூடாக, அரசியல் கட்டுப்கோப்பை விளக்குவதுதான் சரியானது. அதன் அடிப்படையில் சமஷ்டி பற்றிய விடயத்தினையும் நாம் ஆய்வு செய்யவேண்டும.

பலரும் கூறுவார்கள் அமெரிக்க யாப்பு நெகிழாத யாப்பு. அதன் அடிப்படையில் இலங்கையினுடைய பிரச்சினையையும் நாம் யாப்பிற்குள்ளால் சுற்றிச்சுற்றிப் பார்க்கின்றோம். இங்கு நாம் ஓர் புதிய கட்டத்தினை விளங்குவதற்கு பிரதானமான சில நிபந்தனைகள் தேவைப்படுகின்றது.

முதலாவது - அமெரிக்க அரசியல் யாப்பு நெகிழாது இருப்பது பிரதான ஒரு கட்டத்தில் தான். மாநிலங்கள் பிரிந்து செல்லக்கூடாது என்ற கட்டத்தில்தான் அது நெகிழாமல் இருக்கின்றது. ஏனைய இடங்களிளெல்லாம் அமெரிக்க யாப்பு நாளாந்தம், கணத்துக்குக்கணம், நெகிழ்ந்து கொண்டே இருக்கின்றது. இதுதான் உண்மை.

அமெரிக்க யாப்பில் புதிய நடைமுறை ஒன்று உண்டு. பொதிந்திருக்கும் அதிகாரம் என்றொரு பகுதியுண்டு. உலகிலேயே மிகச் சிறிய யாப்பு அமெரிக்க யாப்புத்தான். உலகிலேயே மிகக்கூடிய வயதைக்கொண்ட யாப்பும் அமெரிக்க யாப்புத்தான். அப்படி யென்றால், இங்கு ஒரு முரண்பாடு உள்ளதல்லவா?

மிகச்சிறிய யாப்பு மிகக்கூடிய காலம் உயர் வாழ்ந்துள்ளது என்றால், அது யாப்பிற்குள் நிற்கவில்லை என்றுதானே அர்த்தம் அல்லது அதைவிட யாப்பு வளர்ந்துள்ளது என்பதுதானே அர்த்தம். எப்படி?

அமெரிக்க யாப்பைப் பொறுத்தவரையில், அங்கு நீதிமன்றங்களின் தீர்ப்பு மத்திய அரசாங்கத்திற்கு எப்போதும் சாதகமாகவே இருக்கும். அநேகமாக ஒருசில இடங்களைத் தவிர, அங்கு நீதிபதிகள் ஒன்றைத் தீர்மானிப்பார்கள். ஒருகட்டத்தில் மிகவும் குறுகலாக எழுதப்பட்ட சட்டங்களையே அமெரிக்க யாப்புக் கொண்டிருக்கிறது. அந்த சட்டத்திற்குள் அர்த்தம் பொதிந்திருக்கிறது என்று பிரதம நீதிபதி அதற்கு வியாக்கியானம் அளித்து, அதன்கீழ் கட்டளையிட அவருக்கு அதிகாரம் உண்டு. அந்தக் கட்டளையின் பிரகாரம் புதிய நடைமுறைச்சட்டத்திற்கு அது செல்லும். அவ்வாறெனில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபைகளை விடவும், மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியை விடவும் ஒரு நீதிபதி யாப்பில் ஒவ்வொரு நாளும் திருத்தம் கொண்டுவருவார்.

ஒரு சபைக்கும் போகத்தேவையில்லை. செனட்டிற்கும் போகத்தேவையில்லை. பிரதிநிதிகள் சபைக்கும் போகத்தேவையில்லை. ஏன் அவர்களின் கையொப்பம் தேவை. அவ்வளவிற்கு யாப்பு நெகிழ்ந்து கொண்டேபோகும. அவ்வாறு யாப்பு நெகிழ்வதனால் தான் மிகப் பல்லாயிரக்காணக்கான சட்டவிதிகளை உருவாக்க அமெரிக்காவால் முடிந்தது.

இன்னொரு விடயம் இருக்கிறது. அது இரண்டாவது விடயம். அமெரிக்க யாப்பில் ஜனாதிபதிக்கும் உப விதிகளை உருவாக்கும் அதிகாரம் இருக்கிறது. உப விதிகள் ஒவ்வொன்றும் நடைமுறைக்குரியவை. அவை நடைமுறைக்குத் தேவையான வகையில் நெகிழ்ந்து நெகிழ்ந்து எப்பொழுதும் உருவாகின்றன. எனவே அமெரிக்க யாப்பு இடையறாது நெகிழ்ந்து செல்கின்றது. அந்த நெகிழ்ச்சியில் அது உயிர்வாழ்கிறது. எழுதப்பட்டிருப்பதை விடவும் அமெரிக்க யாப்பின் நடைமுறை வேறுவிதமாக வளர்ந்துள்ளது.

ஆனால் - இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் இது சாத்திமேயில்லை. ஏனெனில் நீங்கள் வைகோவினுடைய வழக்கிலிருந்து இதனைப் பார்க்கலாம். அவர் விடுதலைப் புலிகளுக்காகப் பேசினார் என்பதன் பேரில் பயங்கரவாதிகள் எனக்கூறிச் சிறையில் இடப்பட்டார்.

ஆனால் எல்லோருக்கும் தெரியும் அவர் அதற்காக அடைக்கப்படவில்லையென்பது. இந்தியப் பிரதமருக்கும் தெரியும், தமிழக முதல்வருக்கும் தெரியும், ஏன் கைது செய்த பொலிஸாருக்கும் தெரியும், அந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும், பத்திரிகையாளர்களுக்கும் தெரியும்.

ஆனால், அந்தப் பத்திரிகாதர்மம் அவரை வெளியில் விடுதலை செய்ய உதவவில்லை. ஏனெனில் அவர்களிடம் அப்படிப்பட்ட அரசியல் கலாசாரம் இல்லை. ஒரு யாப்பு சிறப்பாக செயற்பட வேண்டுமெனில் அந்த மக்களிடம் ஒரு சிறப்பான அரசியல் கலாசாரம் இருக்க வேண்டும். ஒரு அரசியல் கலாசாரத்தின் மீது தான் யாப்பு உயிருடன் செயற்படமுடியும். இல்லையெனில் எழுதப்பட்ட சட்டங்களுக்குள் ஒவ்வொருத்தரும் சிறைக்கைதியாக்கப்படுவான. கீழைத்தேச நாடுகளின் யாப்புக்களில் இது பிரதானமானது.

எனவே, இலங்கையில் யாப்புக்களால் பிரச்சினையைத் தீர்க்கலாமென யாராவது நம்புவீர்களா? ஒவ்வொருநாளும் நீதிமன்றம் தான் போய் நிற்கவேண்டும். எதைத் தீர்க்கப் போனாலும் நீதிமன்றம் செல்வார்கள். எந்தச் சின்ன விடயத்திற்கும் நீதிமன்றம் செல்வார்கள.

இந்தியாவின் செய்திக்காக வானொலியைத் திறந்தால் ஒவ்வொரு நாளும் சட்டத்திற்கெதிராக நீதிமன்றில் நின்றவர்களுடைய வழக்குகள அதாவது, பொதுமக்களுடைய வழக்குகளை விடவும் உயர் நீதிமன்றில் விசாரிக்கப்படுகின்ற அதிகமான வழக்குகள் அரசியல்வாதிகள், அரசியல் பிரச்சினைகள், யாப்புப் பிரச்சினைகள தொடர்பானதாகவே இருக்கும். இவ்வாறு நீங்கள் வேறு இடத்தில் காணமாட்டீர்கள்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*உருள்ஆயம் ஓவாது கூறின் பொருள்ஆயம்*
*போஒய்ப் புறமே படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சமாதான முயற்சிகளும் சந்தேக நகர்வுகளும்...

புதிய அரசின் சமாதான முயற்சிகள் தொடர்பான முன்னெடுப்புகள் ஓரளவுக்கு நம்பிக்கைதரும் வகையிலும், விரைவாகவும் நடைபெறுவதாக எண்ணத் தோன்றும் வகையில் செய்திகள் வந்து கொண்டிருந்தாலும், ஜனாதிபதி இது தொடர்பாக - அதாவது சமாதானப் பேச்சுக்கள் எந்தவிதமான இடையூறுகளும், சந்தேகங்களும் இன்றி ஆரம்பித்து இறுதியான அரசியல் தீர்வு என்ற இலக்கினை நோக்கி முன்னொடுக்கப்பட வேண்டுமான சில தெளிவான நிலைப்பாடுகளை எடுக்கவேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் சில உணர்த்திநிற்கின்றன.

- முதலில் சமாதானம் குறித்த அரசினது உறுதிப்பாட்டின் தூய்மையும், விசுவாசத் தன்மையும் ஜனாதிபதியால் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். இது முக்கியமானதாகும். தனது தற்போதைய அரசியல் தேவைகளை நிறைவுசெய்து கொள்ளவும், தன்மீது சமாதானம் தொடர்பாக திணிக்கப்படும் புற அழுத்தங்களை அதாவது சர்வதேச அழுத்தங்களை தற்காலிகமாகவேனும் சமாளித்துக்கொண்டு தனது தலைமையிலான அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மையை வலுப்படுத்திக் கொள்ளவும், நாடு எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார நெருக்கடியை சமாளிக்க சர்வதேச சமூகம் வழங்க வாக்குறுதியளித்துள்ள கடன் நிதியைப் பெற்றுக் கொள்ளவும், ஜனாதிபதி சமாதான முன்னெடுப்பை ஒரு அரசியல் மூலோபாயத்துடன் கூடிய இராஜதந்திரமாகக் கையாளத் திட்டமிட்டிருக்கிறார் என்ற விமர்சனம் பரவலாக ஒரு குற்றச்சாட்டுப்போல் எழுந்துள்ள வேளையில் - அவர் இது தொடர்பான சந்தேகங்களைத் தெளிவுபடுத்த வேண்டிய அவசியமும் உள்ளது.

- சமாதானம் என்பது 'போர்நிறுத்தம்' என்ற முக்கிய அம்சத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். போர் நிறுத்தம் என்ற செயற்பாடு தொடர்வதற்கு இராணுவச் சமநிலை பேணப்படுதல் என்ற அம்சம் முக்கியமானதாகும். இராணுவச் சமநிலை பேணப்படுதலை அரசு மேற்கொள்ளும். படைக்கு ஆட்திரட்டல், புதிய ஆயுதக் கொள்வனவு நடவடிக்கைகள் மற்றும் சந்தேகத்திற்கிடமானதும் பல்வேறுவகையான உள்நோக்கங்களை உடையதுமான தொலை நோக்கு சதித் திட்டங்களை இரகசியமாக உள்ளடக்கியதுமான வெளிநாடுகளுடனான பாதுகாப்பு ஒப்பந்தங்களை மேற்கொள்ளுதல் போன்ற அரசின் செயற்பாடுகள் பெருமளவுக்குப் பாதிப்பதுடன், போர்ச் சூழலை மீண்டும் ஏற்படுத்த அரசு முனைவதாகவே எண்ணவும் தூண்டும்.

- குறிப்பாக கடந்த அரசு - திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு குத்தகைக்குக் கொடுத்தமை, பலாலி விமானப்படைத்தளத்தைப் புனரமைக்க இந்திய அரசின் நிபந்தனைகளுக்கு இணங்கி, நிதி பெற முயற்சித்துள்ளமை... அமெரிக்க உதவியுடன் திருமலையில் செயற்திட்டங்களை விஸ்தரிக்க முயன்று வருபவை போன்றவை வெளிப்பார்வைக்குத் தேசிய பொது அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகளாகத் தோற்றம் காட்டினாலும், தமிழ் மக்களின் பாரம்பரிய வாழ்விடங்களின் பாதுகாப்புக்குப் பலவழிகளிலும் ஆபத்தானவை என்பது விளக்கிக் கூறவேண்டியதில்லை.

இனப்பிரச்சினைக்கான இறுதியும், உறுதியுமான ஒரு அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகள்மூலம் எட்டப்படும் வரைக்கும் இம்மாதிரியான நடவடிக்கைகள் வடக்கு- கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படுவதானது, அரசின் சமாதான முயற்சிகள் மீதான நம்பகத்தன்மையைச் சந்தேகிக்க வைப்பதுடன், எதிர்கால பேச்சுவார்த்தை மேசை மோதல்களாக மாறுவதற்கு வழிவகுக்கும் என்ற உண்மையை இக்கட்டத்தில் குறிப்பிடவேண்டியது அவசியமாகும்.

இதனை ஜனாதிபதி கவனத்தில் கொள்ளாவிடின், இலங்கையின் தேசிய நலன்களை உதாசீனம் செய்து, தனது அரசியல் சுயநலன்களைப் பாதுகாக்க முயன்றவர் என்று வரலாற்றில் அவர் அடையாளப்படுத்தப்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

அடுத்து மிக முக்கியமான விடயம் - ஜனாதிபதி தனது ஆலோசகரும் வெளியுறவமைச்சருமான லக்ஷ்மன் கதிர்காமரின் விடுதலைப்புலிகளுக்கெதிரான பிரசாரப் புலம்பல்களையும், ஜே.வி.பியினர் தமிழ் மக்களுக்கு வெறுப்பும், சினமூட்டும் அறிக்கை விடுப்புக்களையும் கட்டுப்படுத்திவைக்க கடுமையான நடவடிக்கைகளை எடுக்கவேணடும் என்பதேயாகும்.

கதிர்காமரினதும், ஜே.வி.பியினரதும் இந்த செயற்பாடுகளையும் ஜனாதிபதியின் சமாதான முன்னெடுப்பு முயற்சிகளையும் ஒருங்குசேரப் பார்த்தால் எறுக்குமாறானதும், முரண்பாடானதும் நிலைப்பாடுகளை அரசு கொண்டுள்ளதையே இனங்காட்டுவதாகவுள்ளது.

இந்த நிலைமையானது அரசின் சமாதான முயற்சிகள் மீதான விசுவாசத்தின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துவதுடன், இந்த முன்னெடுப்பு தமிழ் மக்களுக்கு ஜனாதிபதி விரிக்க முயலும் ஒரு மரணப்பொறியாகவும் எண்ண வைக்கவே செய்யும்.

எனவே இவற்றைக் கவனத்தில் கொள்வது ஜனாதிபதியினதும், அரசினதும் பொறுப்பேயாகும்.

சமாதானம் என்பது தமிழ் மக்களுக்குத் தாம் வழங்கும் ஒரு சலுகையாக அரசோ ஜனாதிபதியோ கருதி அதனை கையாள நினைப்பது ஆபத்தான எதிர்வளைவுகளையே உண்டுபண்ணும் என்பதை சொல்லிப் புரிய வைக்கவேண்டிய அவசியமேயில்லை.

ஜனாதிபதி பிரச்சினைகளின் நிஜமுகங்களை, தாக்கங்களை மட்டுமல்ல அதனை உணர்ந்து தீர்க்கும் அல்லது தவிர்க்கும் முறைகளையும் அறிந்து செயற்படுதல் என்பது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

## நாடும் நடப்பும்




## ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்புக்குழு செயலாளராக எஸ்.பி.திசநாயக்கவை நியமிக்க முடிவு

தேசிய அமைப்பாளர் என்ற பதவியை உருவாக்கி - அரச முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவிடம் வழங்கும் திட்டத்தை, ஐக்கிய தேசியக் கட்சி கைவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பாக இம்மாதம் நடைபெறவிருந்த கூட்டத்திலேயே புதிதாகத் தேசிய அமைப்பாளர் பதவியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

எஸ்.பி.திசநாயக்கவுக்கு கட்சியில் உயர் பதவி ஒன்றை வழங்குவதற்காக இந்தப் பதவியை உருவாக்கத் திட்டமிடப்பட்டிருந்தபோதும், அந்தத் திட்டம் கைவிடப்பட்டிருக்கிறது.

இதற்குப் பதிலாகச் செயலாளர் ஒருவர் தலைமையில் தேசிய அமைப்புக் குழுவொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது. இந்தக் குழுவுக்குப் பெரும்பாலும் எஸ்.பி.திசநாயக்க செயலாளராக நியமிக்கப்படலாம் எனக் கூறப்படுகிறது.

கடந்த ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததையடுத்து, கட்சியின் செயலாளர் செனரத் கப்புகொட்டுவுக்குப் பதிலாக - நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய கூட்டத்தில் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளனர்.

இதேவேளை செனரத் கப்புக்கொட்டுவவை, எதிர்வரும் மாகாண சபைத்தேர்தலில் - மத்திய மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு ஐ.தே.க தீர்மானித்துள்ளது.

கட்சியின் தவிசாளராக மலிக் சமரவிக்கிரம தொடர்ந்தும் அப்பதவியை வகிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, ஐ.தே.கட்சிக்குப் புதிய பிரதித் தலைவர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு, சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

மேலும் இன்றைய கூட்டத்தில் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியில் புதிய கட்டமைப்பை உருவாக்கத் தீர்மானித்துள்ளார்.

அத்துடன், கட்சியில் 23 குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றுக்குச் செயலாளர்கள் நியமிக்கப்பட்டு கட்சியை நிர்வகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பட்டதாரிகளுக்கான நியமனங்களுக்காக டிப்ளோமாதாரிகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படவில்லை!

அரச துறைகளில் வேலைவாய்ப்பை பெற்றுக் கொள்வதற்காக கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாப் பட்டதாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பிரதேச செயலகங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கின்றது.

அரச துறைகளில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கும்போது, உயர் தொழில்நுட்பக் கல்லூரி ஊடாக உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா மற்றும் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாக் கற்கைநெறிகளைப் பூர்த்தி செய்தோருக்கும் நியமனங்கள் வழங்கப்படுவதே வழமையாகும்.

ஆனால், இம்முறை வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொள்வதற்காகக் கணக்கியல் மற்றும் வர்த்தக டிப்ளோமாதாரிகளால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் சில பிரதேச செயலகங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட டிப்ளோமாதாரிகள் இது தொடர்பாக யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

## பிரதேச சபையின் அனுமதி பெற்றே கட்டடங்கள் அமைக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

வலி தென்மேற்கு பிரதேச சபைககுட்பட்ட பகுதிகளில் கடைகள், மதில்கள் கட்டுவோர் - பிரதேச சபையின் அனுமதியைப் பெற்ற பின்னரே கட்டுமானப்பணிகளை ஆரம்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக - மானிப்பாய் சோதி வேம்படிப் பகுதியில் பல கடைகள் பிரதேச சபையில் அனுமதி பெறப்படாது சரியான வரைபுகளின்றி கட்டப்பட்டு வருவதால், சுற்றாடலில் பெரும் பாதிப்பு ஏற்படுமெனவும், இதனைக் கருத்திற்கொண்டே புதிய கட்டட வேலைகளை ஆரம்பிப்போர் பிரதேச சபையின் அனுமதி பெறபின்னரே கட்ட வேண்டுமெனவும் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

## குடாநாட்டுக்கான உலர்உணவு நிவாரணத்தை ஐம்பது சதவீதத்தால் குறைப்பதற்குத் திட்டம்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் கடந்த 15 வருடங்களாக அரசாங்கத்தால் மாதாந்தம் வழங்கப்பட்டுவரும் இலவச உலர் உணவு விநியோகத்தைப் பெறுபவர்களின் தொகையை 50 சத வீதத்தால் குறைப்பது தொடர்பாகத் தற்போது ஆராயப்பட்டு வருவதாகத் தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் சுமார் ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 334 குடும்பங்களைச் சேர்ந்த 3 இலட்சத்து 87 ஆயிரத்து 11 பேர் இந்த நிவாரணத்தைப் பெற்று வருகின்றனர். இவ்வாறு அரசினால் மேற்படி குடும்பங்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு வகைகள் ஆகக் குறைந்தது ஒரு வாரத்திற்கு மட்டுமே போதுமானதாகும்.

எனினும், இந்த நிவாரணப் பொருட்களை மாதாந்தம் பெறும் குடும்பங்களில் பெரும்பாலானவை எத்தகைய மாதாந்த வருமானமும் பெறாதவையாகும்.

யாழ்.மாவட்டத்தில் தற்போதுள்ள ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 712 குடும்பங்களில் - ஒரு லட்சத்து 20 ஆயிரத்து 334 குடும்பங்கள் அரசின் இலவச உலர் உணவு விநியோகத்தைப் பெற்றுவருகின்றனர். இவர்களில் சுமார் 50 சதவீதத்தினருக்குரிய நிவாரணம் நிறுத்தப்படின், பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படும்.

இந்த நிலையில் யாழ். மாவட்டத்தில் தற்போது உலர் உணவு நிவாரணத்தை எத்தகைய கட்டுப்பாடுகளுக்கும் உட்படுத்தாமல் அனைவருக்கும் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும் எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், இது விடயம் குறித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் விரைவில் ஜனாதிபதியுடன் பேசுவார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை - யாழ்.மாவட்த்தில் வழங்கப்பட்டுவரும் இலவச உலர் உணவு நிவாரணத்தைக் குடாநாட்டின் இயல்பு நிலை திரும்பும்வரை நிறுத்தவேண்டாமென யாழ் மாவட்டத்திலுள்ளள பொது அமைப்புக்கள் அரசாங்கத்தைக் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை - 2004
# பொதுச் சாதாரணப் பரீட்சை - COMMON GENERAL TEST

P. உமாசங்கர், விரிவுரையாளர்.
இலங்கை தொழில்நுட்பக்கல்லூரி,
கொழும்பு.

P. கமல்தாசன்,
யா/இந்துமகளிர் கல்லூரி

## மாதிரிக் கட்டமைப்பு வினாத்தாள் 12/T

மேற்படி பரீட்சைக்கென எம்மால் அண்மையில் வெளியிடப்பட்ட (ஒன்பதாம் பதிப்பு 2004-ஏப்ரல்) பொதுச்சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூறுக்கு மேதிகமாக பின்வரும் அண்மைக்கால விடயங்கள் தொகுத்துத் தரப்படுகின்றன. இந்த அனைத்து விடயங் களையும் ஒருங்கிணைத்து கற்பதன் மூலம் 21-05-2004 அன்று நடைபெறவுள்ள இறுதிப் பரீட்சையில் விசேட சித்தி பெற எமது உளங்கனிந்த நல்வாழ்த்துக்கள்.

## பொது விழிப்பு 01-15 வரையான வினாக்கள்

- உலகின் முதற்தர சுழற்பந்து வீச்சாளர் முரளீதரனின் புதிய வீச்சு முறையான (தூஸ்ரா) குறித்து நடுவர் கிறிஸ் புரோட் (இங்கிலாந்து) ஐ.சி.சி.யிற்கு முறைப்பாடு செய்தமையை தொடர்ந்து இப்பந்து வீச்சு முறை குறித்து சர்ச்சை ஏற்பட்டுள்ளது. எனினும் மேற் கிந்திய அணிவீரர் ஹொட்னி வோல்ஸின் 519 விக்கெட் சாதனையை வென்றமை குறிப பிடத்தக்கது.
- கல்வி உயர்கல்வி அமைச்சின் புதிய செயலாளராக டாக்டர் தாரா டி மெல் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- மேற்கிந்திய கிரிக்கெட் அணித்தலைவர் பிறைன் லாரா மீண்டும் புதிய சாதனை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. அதாவது டெஸ்ட் போட்டி ஒன்றில் ஆகக் கூடுதலாக 400 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். இவர் பழைய உலக சாதனையான 375 ஓட்டங்களையும் இங்கிலாந்திற்கு எதிரான போட்டியில் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- தாய்வானில் அண்மையில் நடைபெற்ற அதிபர் தேர்தலில் வாக்குகள் எண்ணல் தொடர்பாக மோசடி இடம்பெற்றதுள்ளது என எதிரணி வேட்பாளரின் ஆதரவாளர்கள் வழக்குத் தாக்குதல் செய்தமையை அடுத்து உயர் நீதிமன்றம் வாக்குகளை மீள எண்ணுமாறு உத்தரவிட்டுள்ளது. இத்தேர்தலில் ஹென்சூய் பியன் 30,000 வாக்குகள் வித்தியாசத்தல வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.
- அண்மையில் இலங்கையில் 13 ஆவது பொதுத்தேர்தலும் இந்தியாவில் 14 ஆவது பொதுத்தேர்தலும் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.
- அரச ஊழியர்கள் இளைப்பாறிய பின்னர் வழங்கப்படும் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்குப் பதிலாக 2003 ஜனவரி முதல் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்போது ஊழியர் மாதச் சம்பளத்தில் 8 % மும் மாகாண அல்லது மத்திய அரசாங்கம் 12 % பங்களிப்பு செய்ய வேண்டும்.
- இலங்கை கிரிக்கெட் சபையின் தற்போதைய தலைவர் மொஷான் டி சில்வா ஆவார். முன்னாள் தலைவர் திலங்க சுமதிபாலாவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- காற்பந்தாட்ட உலகின் பிரபல வீரர் மரடோனா அண்மையில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவரது தலைமையில் 1986 இல் ஆர்ஜென் ரீனா உலக காற்பந்தாட்ட கிண்ணத்தை சுவீகரித்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் போதைவஸ்து பாவனை தொடர்பாக 1990 இல் நடைபெற்ற இத்தாலி சம்பியன்ஷிப் போட்டியில் இவர் நீக்கப்பட்டமை குறிப்பிடத்தக்ககது.
- 14 வருடங்களுக்குப் பின்னர் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி பாகிஸ்தானில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.
- தூஸ்ரா பந்து வீச்சு முறை என்பது சுழற்பந்து வீச்சில் வலது கை துடுப்பாட்ட வீரர்கள் அடிக்க முடியாதபடி வீசப்படும் முறையாகும். அதாவது, பந்து வீச்சாளரின் கையில் இருந்து விடுபட்ட பந்து ஆடுகளத்தில் விழுந்ததும் வேகமாக சுழன்று ஸ்டம்புக்கு வெளியே போய்விடுவதாகும்.
- சிம்பாப்வே கிரிக்கெட் அணியின் பிரச்சினையும் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியும்.

இலங்கைத் தொடருக்கு முன்னரான சிம்பாப்வே அணித்தலைவர் ஹீத்ஸ்ட்ரீக் கிரிக்கெட் நிர்வாகத்திடம் சமர்ப்பித்த கோரிக்கை காரணமாக ஹீத்ஸ்ட்ரீக்கிற்கு ஆதரவளித்த 15 வெள்ளையின வீரர்களும் அணியிலிருந்து நீக்கப்பட்டு புதிய தலை வராக தைபு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஹீத் ஸ்ட்ரீகின் கோரிக்கைகள்

- தற்போதைய சிம்பாப்வே அணியை மேலும் திறமையாக்குவதற்கு திறமையற்ற கறுப் பின வீரர்களை நீக்கி மாற்று வீரர்களை இடம்பெறச் செய்க.
- அணித் தேர்வில் என்னையும் இடம்பெறச் செய்தல் வேண்டும்.
- மேற்படி இரு கோரிக்கைகளையும் நிறைவேற்றாவிட்டால் தாம் ராஜினாமாச் செய்யப் போவதாகவும் அறிவித்தார்.

- உலகின் முதலாவது விவசாயப் பூங்கா கன்னொருவவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இடைநிறுத் தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகள் புதிய அரசினால் நோர்வே அனுசரணை யுடன் மீண்டும் ஆரம்பமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.
- பாகிஸ்தானில் அணுஆயுத பரிசோதனைகளை வெற்றிகரமாக நடாத்திய மூத்த விஞ்ஞானி அப்துல் கதிர்கான் தனது அணுஆயுத இரகசியங்களை வடகொரியா, லிபியா, ஈரான் ஆகியவற்றுக்கு விற்பனை செய்ததை பகிரங்கமாக ஒப்புக்கொண் டுள்ளார்.
- 2004 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையால் சர்வதேச அரிசி ஆண்டாகப் பிரகட னப்படுத்தப்பட்டது.
- பூமியிலிருந்து 800 கோடி மைல்கள் தூரத்தில் உறைந்த நிலையில் காணப்பட்ட "சேட்னா" எனும் கிரகம் நாஸாவின் மைக் பிரவுண் தலைமையிலான விஞ்ஞானிகள் குழுவினால் கண்டறியப்பட்டது.
- பலஸ்தீனப் போராளிக் குழுவான ஹமாஸின் ஆன்மிகத் தலைவர் ஷேக் அகமட் யாஸின் இஸ்ரேலிய ஹெலி தாக்குதலில் கொல்லப்பட்டதையடுத்து புதிய ஆன்மிகத் தலைவராக அல் - ரன்யீஸி தெரிவு செய்யப்பட்டார். இவரும் இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.
- உலகின் முதற்தர சுழற்பந்து வீச்சாளர் முரளீதரன் ஏற்கனவே நிலைநாட்டப்பட்ட 500 விக்கெட் சாதனையைக் குறைந்த டெஸ்டில் (87) குறைந்த வயதில் (32) நிகழ்த்திய முதல் வீரர் ஆவர்.
- நேட்டோ அமைப்பில் புதிதாக பல்கேரியா, எஸ்தோனியா, லட்வியா, லிதுவேனிசியா, ருமேனியா, சுலோவாகியா, அல்பேனியா ஆகிய ஏழு நாடுகள் புதிதாக இணைந் துள்ளன. இதனால் நேட்டோவின் உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 26 ஆகும்.
- இங்கிலாந்தின் பி.பி.சி. செய்திச் சேவையின் புதிய தலைவரான மைக்கல் கிரேட் தெரி வாகியுள்ளார். பிரித்தானிய விஞ்ஞானி டேவிட் ஹெலி தொடர்பாக நடத்தப்பட்ட ஹற்றன் அறிக்கை தொடர்பான பிரச்சினைகளில் பி.பி.சி. இன் முன்னாள் தலைவர் கெயின் டேவிட் தனது பதவியிலிருந்த விலகியமை குறிப்பிடத்தக்கது.
- கரிபியன் நாடான ஹெய்டியில் ஜனாதிபதி ஜூன்பேட்ரிரான்ட் அரிஸ்ரைட்டிற்கு எதி ராக ஆயுதக் கிளர்ச்சி இடம்பெற்றது. இதனால், சர்வதேச அழுத்தம் காரணமாக ஜனாதிபதி வெளியேறியதை அடுத்து ஐ.நா. சமாதானப் படை அங்கு சென்றது. இதன் பின்னர் புதிய பிரதமராக ஜெராட் லரோட்டு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- 22 வருடங்களாக மலேசியாவின் பிரதமராக இருந்து கடந்த ஆண்டில் ஓய்வு பெற்றவர் மஹதீர் முகமட் ஆவார். இதனைத் தொடர்ந்து தற்போது பிரதமராகப் பதவி வகிப்பவர் அப்துல்லா அகமட் ஆவார்.
- அமெரிக்காவிற்குள் வரும் வெளிநாட்டவர்களது விரலடையாளத்தையும் புகைப் படத்தையும் எடுக்கும் நடைமுறையை அமெரிக்கா ஆரம்பித்ததை அடுத்து பிரேஸில் தனது நாட்டிற்குள் வரும் அமெரிக்கர்கள்மீது இதே நடைமுறையை அமுல்படுத்தி வருகின்றது.
- சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு 'பவ்ரல்' என அழைக்கப்படுகின்றது. இந்த அமைப்பு தேர்தலில் வன் முறைகள் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதைக் கண்காணித்து வருகின்றது. இதன் தலைவராக கிங்ஸ்லி ரொட்ரிகோ நியமிக்கப்பட்டுள்ளார்.

A. உய்த்தறிதல், விஞ்ஞான வரைபுகள், சமச்சீர்தன்மை, உரு ஒன்றில் உள்ளடப் பட்டுள்ள சிறு வடிவங்களின் எண்ணிக்கை, கணித ரீதியான வினாக்கள் 16-25 வரையான வினாக்கள்.

1. உய்த்தறிதல்

உ+ம்:

1. பின்வருவன ஒவ்வொன்றும் முதலிரு கூற்றுக்களில் இருந்து மூன்றாம் கூற்று உய்த் தறியப்பட்டுள்ளதாக கருதப்படுகின்றது.

பின்வருவனவற்றில் எது சரியான உய்த்தறிவாகும்?

(1) Xஉம் yஉம் தேநீரை விரும்புகின்றனர். yஉம் Zஉம் கோப்பியை விரும்பிகின்றனர். ஆகவே Xஉம் Zஉம் கோப்பியை விரும்புகின்றனர்.

(2) Xஉம் yஉம் நண்பர்கள். yஉம் Zஉம் நண்பர்கள். ஆகவே Xஉம் Zஉம் நண்பர்கள்.

(3) Xஎன்பவர் yஇன் நண்பனன்று. y என்பவர் Zஇன் நண்பனன்று. ஆகவே Xஎன்பவர் Zஇன் நண்பனன்று.

(4) Xஎன்பவர் yஇன் மகனாவார். y என்பவர் Zஇன் தந்தையாவார். ஆகவே Xஉம் Zஉம் சகோதரர்கள்.

(5) Xஉம் yஉம் ஒரே கட்சிக்கு வாக்களிக்கின்றனர். yஉம் Zஉம் ஒரே கட்சிக்கு வாக்களிக்கின்றனர். ஆகவே Xஉம் Zஉம் ஒரே கட்சிக்கு வாக்களிக்கின்றனர்.

2. வனவிலங்குப் புகலிடமொன்றின் அறை ஒன்றில் உள்ள விலங்குகள் அனைத்தும் இறந்து கிடந்தன. விலங்குகள் எல்லாம் இறபத்தற்கான நேரடிக் காரணமாகப் பின்வருவனவற்றின் எதனைக் கருதமுடியாது.

(1) போதியளவு ஒட்சிசன் கிடைக்காமை.

(2) போதியளவு உணவு கிடைக்காமை.

(3) வளியுடன் ஏதோவொரு நச்சுவாயு கலந்திருந்தமை.

(4) பெரிய விலங்குகள் சிறிய விலங்குகளைக் கொன்றமை.

(5) வழங்கப்பட்ட உணவில் நஞ்சு கலந்திருந்தமை.

3 தேர்தல் முறைமை எதுவும் ஒருபோதும் சிறந்த தலைவர்களை உருவாக்கமுடியாது. தேர்தலில் வெற்றி பெறுவதற்கு ஒருவர் இரக்கமற்றவராகவும் ஒருமுகப்பட்ட மனமுள்ளவராகவும் இருத்தல்வேண்டும். ஆனால் இவை ஒரு சிறந்த தலைவரின் விரும்பத்தக்க இயல்புகளல்ல. சிறந்த தலைவர் நேர்மையானவராகவும் திறந்த மனதுள்ளவராகவும் இருத்தல்வேண்டும். அத்தகைய ஒருவர் தேர்தலில் வெற்றி பெறமாட்டார்.

பின்வருவனவற்றில் எது மேற்குறித்த பந்தியின் பிரதான கருத்தை மிகச் சிறந்த முறையில் எடுத்துரைக்கின்றது?

(1) இரக்கமின்மையும் ஒருமுகப்பட்ட மனமுள்ள இயல்பும் தலைவரிடம் இருத்தல்.

(2) திறந்த மனதுள்ளவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதில்லை.

(3) தேர்தலில் வெற்றி பெறுபவர்கள் ஒருபோதும் சிறந்த தலைவர்களாக இருப்பதில்லை.

(4) தேர்தல்கள் கட்டாயம் போட்டிக்குரியனவாக இருத்தல்வேண்டும்.

(5) நேர்மையானவர்கள் தேர்தலில் வெற்றி பெறுவதில்லை.

II விஞ்ஞான வரைபுகள்

உ+ம்:

1. உருவில் காட்டப்பட்டுள்ள ஒரு கூம்புக் குடுவைக்குள் நீர் உறுதியான வீதத்தில் பாய விடப்படுகின்றது. மாணவன் ஒருவன் குடுவைக்குள் செல்லும் நீரின் உயரம் தொடர்பாகச் சடஇடைவெளிகளில் அவதானிப்புக்களை செய்கிறான். கீழே தரப்பட்டுள்ள வரைபுகளில் எது மாணவனுடைய அவதானிப்புக்களை திருத்தமான வகை குறிக்கிறது.






III சமச்சீர்தன்மை

உ+ம்:

1. அருகே தரப்பட்டுள்ள வடிவம் இரு சமச்சீர் கோடுகளை உடையன. இவ்வடிவம் வெட்டி எடுக்கப்பட்டு இரு முறி கோடுகளில் ஒன்றின் வழியே மடிக்கப்பட்டால் மடிப்பின் ஒர பக்கத்தில் உள்ள கோடுகள் மற்றைய பக்கத்தில் உள்ள கோடுகளுடன் செப்பமாகப் பொருந்தும் என்பதே இதன் கருத்தாகும்.



பின்வரும் வடிவங்களில் எது இரு சமச்சீர் கோடுகளை உடையது.




2. கீழே காட்டப்பட்டுள்ள முதல் இரு தராசுகளும் இரு பக்கங்களிலும் சம நிறைகளை உடையவை.




3. இரு பக்கங்களினதும் நிறைகள் சமமாக இருக்கத்தக்கதாக மூன்றாம் தராசின் வலப்பக்கத்திற்கு சேர்க்கப்பட வேண்டிய நிறையை உள்ளடக்கும் விடையை பின்வருவனவற்றிலிருந்து தெரிந்தெடுக்குக.




IV. உரு ஒன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சிறு வடிவங்களின் எண்ணிக்கை

உ+ம்

1. பின்வரும் உருவில் எத்தனை முக்கோணிகள் உண்டு?



(1) 8 (2) 10 (3) 12
(4) 14 (5) 16

(தொடரும்)

# அஜரிய மாநிலப் போராளிகளால் பெருமளவு ஆயுதங்கள் கையளிப்பு!



(அஜரியா)

ஜோர்ஜியாவின் பிரதேசமும் முன்னர் தீவிரவாதிகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசமுமான அஜரியாவில் அதிகளவிலான ஆயுதங்கள் போராளிகளால் கையளிக்கப்பட்டுள்ளன.

மூவாயிரம் தன்னியக்கத் துப்பாக்கிகளும், 400 கிரனேட்டுக்களும், 50 கிரனேட் லோஞ்சர்களும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களில் அடங்கியுள்ளதாக ஜோர்ஜிய உள்நாட்டமைச்சர் தெரிவித்தார்.

ஜோர்ஜியப் படையினருக்கு எதிராகப் போரிடுவதற்கென அஜரியாவின் போராளித் தலைவர் அஸ்லான் அபிசிட்சி, ஆயுதங்களை மக்களுக்கு வழங்கியிருந்தார். அண்மையில் அஜரியாவில் அஸ்லானுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டு ஜோர்ஜிய அரசுக்கு மக்கள் தமது ஆதரவினைத் தெரிவித்தனர்.

இதனால், அஸ்லான் நாட்டிலிருந்து வெளியேறி ரஷ்யாவில் தஞ்சமடைந்துள்ளார். ரஷ்யாவுடன் நெருக்



கமான தொடர்புகளை அஸ்லான் வைத்திருந்தார். மேற்கு நாடுகளுடன் அதிக தொடர்புடைய ஜோர்ஜிய ஜனாதிபதி சாகஸ்விலியின் ஆட்சியைப் போராளித் தலைவரான அஸ்லான் எதிர்த்துவந்துள்ளார்.

அஸ்லான் பதவியில் இருந்த காலத்தில் கார்களையும், செல்லப் பிராணிகளையும், கலைப் பொருட்களையும் வைத்திருந்தார்.

அஸ்லான் வளர்த்த நாயொன்று அவர் நாட்டிலிருந்து வெளியேறிய பின்னர் உணவு உண்ணாமல் இருந்த காரணத்தால், அது ரஷ்யாவிலுள்ள அஸ்லானின் புகலிடத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

# மதத்தை இழிவுபடுத்துவதாக கூறி ஈரானில் திரையிட்ட படம் நிறுத்தம்



ஈரானில் மிகவும் வசூலுடன் திரையிடப்பட்டிருந்த படம் ஒன்று இஸ்லாம் மதத்தை கேலி செய்வதாகத் தெரிவித்து நிறுத்தப்பட் டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை அதிகாரிகளின் அழுத்தம் காரணமாக புல்லி என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டுள்ள இப்படம் நிறுத்தப்பட்டுள்ளதென இப்படத்தின் தயாரிப்பாளர் தெரிவித்தார்.

இப்படம் மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்றிருந்த வேளையிலும், தீவிர மதவாதிகள் மத்தியில் விமர்சனத்துக்குள்ளானது. இப்படத்தில் குற்றவாளியொருவர் மதத் தலைவராக மாறுவேடத்துடன் திரிந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் ஜுலை மாதம் வரை இப்படம் திரையரங்குகளில் திரையிடப்படவிருந்தது.

ஈரானின் கலாசார அமைச்சு இப்படத்தை தணிக்கையின்போது தடை செய்யவில்லை. ஆனால், ஈரானிய பாதுகாப்பு சபையின் தலைவர் அஜோத்தலா அகமட் ஜனரி இப்படம் மக்கள் மத்தியில் மதம் தொடர்பான தவறான கருத்தை வெளியிட முயல்வதாகத் தெரிவித்திருந்தார்.

## உலக நோக்கு

# சவுதித் தலைநகர் றியாட்டிலிருந்த 4 ஆயுததாரிகள் படையினரால் கைது



சவுதி தலைநகர் றியாட்டிற்கு வெளியே உள்ள கட்டடத் தொகுதியொன்றில் சவுதி அரச படையினருக்கும், துப்பாக்கிதாரிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின் பின் நான்கு துப்பாக்கிதாரிகளை படையினர் கைதுசெய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இரு பகுதியினருக்கும இடையில் நடந்த இந்தத் தாக்குதல் சம்பவத்தினால் கட்டடத் தொகுதிக்கு வெளியில் இருந்த வெளிநாட்டவர்கள் எவரும் காயமடையவில்லை என ரொய்ட்டர் செய்தி நிறுவனம் தெரிவித்தது.

சவுதி நாட்டிலுள்ள வெளிநாட்டவர் மீதும், அந்நாட்டின் அரசிற்கெதிராகவும் முஸ்லிம் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் நடைபெற்ற கட்டடத் தொகுதியை சவுதியின் தேசிய காவல் படையினர் காவல் காத்து வருவதாகவும் தொிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடைபெற்ற கட்டடத் தொகுதியில் கடும் அமைதியின்மை நிலவியதாகவும், படையினர் அங்கு பிரவேசித்த வேளை துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் படையினர் தெரிவித்தனர்.

இந்தக் கட்டடத் தொகுதி சவுதி மன்னரின் உறவினருக்கு சொந்தமானதெனத் தெரிவிக்கப்படுகிறது.

# ஆபிரிக்க நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் வெளியார் தலையிடக்கூடாது

## லிபியத் தலைவர் கடாபி எச்சரிக்கை

ஆபிரிக்கக் கண்டத்துடன் தொடாபில்லாத நாடுகள், ஆபிரிக்க நாடுகளின் உள்நாட்டுப் பிரச்சினைகளில் தலையிட வேண்டாமென லிபியத் தலைவர் கடாபி எச்சரிக்கை விடுத்துள்ளார். 'சென்சாட்' எனப்படும் 20 ஆபிரிக்க நாடுகளை அங்கத்தவர்களாகக் கொண்ட அமைப்பின் உச்சி மாநாட்டில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே கடாபி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த மாநாடு மாலியின் தலைநகர் பமாகோவில் நடைபெறுகின்றது. சூடான், ஐவரிக்கோஷ்ட் ஆகிய நாடுகளின் பிரச்சினைகள் வெளிநாடுகளில் மிகைப்படுத்தப்படுவதாகவும், ஐவரிக்கோஷ்டின் தலைவர் கபாகோ ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரெனவும் பிரச்சினைகளின் தீர்வினை அவரே காணவேண்டும் எனவும் கடாபி தெரிவித்தார்.

ஐவரிக்கோஷ்ட் முன்னர் பிரான்ஸின் காலனி ஆதிக்கத்துக்குட்பட்டிருந்தது. இதனால் தனது ஆதிக்கத்தினை மீண்டும் ஐவரிக்கோஷ்ட் நாட்டின் அரைப்பங்கை தம்வசம் வைத்திருக்கும் தீவிரவாதிகளுடன் அதிகாரப் பங்கீடு ஒன்றினை மேற்கொள்ள வேண்டுமென பிரான்ஸ் ஐவரிக்கோஷ்ட் அரசுக்கு அழுத்தம் கொடுத்திருந்தது.

அத்துடன் - ஐவரிக்கோஷ்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள தற்காலிக போர் நிறுத்தத்தை கண்காணிப்பதற்கு, சமாதான படையினரையும் அனுப்பிவைத்துள்ளது.

மேலும், இந்த உச்சி மாநாட்டில் ஆபிரிக்க நாடுகள் மத்தியில் பிராந்திய இராணுவ படையொன்றினை லிபியத் தலைவர் கடாபியின் தலைமையில் உருவாக்குவதற்கான பேச்சுக்களை நடத்துவதற்கும் திட்டமி



டப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் சூடானின் மேற்குப் பிரதேசமான டார்பூரில் ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினையில் ஐக்கிய நாடுகள் சபையும் வெளிநாடுகளும் சூடானுக்கு அழுத்தம் கொடுத்து வருவதாக கடாபி தெரிவித்தார். ஆபிரிக்க நாடுகளில் பழங்குடி மக்களின் பிரச்சினைகள் பொதுவானது எனவும், இந்தப் பிரச்சினையை சென்சாட் மூலம் தீர்த்திருக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ரம்ஸ்பீல்டின் இரகசிய அனுமதியுடனேயே ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தப்பட்டனராம்

## நியூயோர்க் சஞ்சிகையொன்று தகவல்



அமெரிக்க பாதுகாப்புச் செயலர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் இரகசியமான திட்டமொன்றின் மூலம் தனிப்பட்ட முறையில் ஈராக்கிய கைதிகளின் துன்புறுத்தலுக்கு, அமெரிக்கப் படைகளுக்கு அனுமதி வழங்கியிருந்தாரெனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளார்.

இவ்வகையான திட்டம் ஆப்கானிஸ்தானில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இத்திட்டத்தினை ஈராக்கிலும் கைதிகள் மீது செயற்படுத்தியிருந்ததாகவும் நியூயோர்க் சஞ்சிகையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையின் கருத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்திருந்த பென்ரகன் பேச்சாளர் பாதுகாப்பு அமைச்சில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் எவரும் அங்கீகாரம் வழங்கவில்லை எனத் தெரிவித்தார்.

ஆனால், நியூயோர்க் சஞ்சிகையின் கட்டுரை ஆசிரியர் செமஷர் கோஷ் புகழ்பெற்ற பத்திரிகையாளரெனவும், அபு கரெப் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தலை படங்களுடன் முதலில் வெளியிட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நேற்று வொஷிங்ரன் போஸ்டில் அமெரிக்கப் படைகள் சிரிய நாட்டு கைதிகளிடமிருந்து உண்மையை அறிந்துகொள்வதற்கு கைதிகளை



நிர்வாணமாக நிறுத்தி நித்திரை கொள்ளவிடாது தடுத்திருந்ததாக செய்தி வெளியிட்டது.

சென்ற ஆண்டு ரம்ஸ்பீல்டும் அவரது பேச்சாளர் சம்போனும், இவ்வகையான ஈராக்கிய கைதிகள் துன்புறுத்தல் தொடர்பான திட்டங்களை விரிவுபடுத்தியிருந்ததாக நியூயோர்க் ரைம்ஸின் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈராக் மோதல்களில் அதிக உயிர்ச் சேதம்!

(பக்தாத்)

ஈராக்கில், ஷியா முஸ்லிம்களின் மதத் தலைவர் சதார் ஆதரவாளர்களுக்கும் அமெரிக்கப் படையினருக்கும் இடையே மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

தலைநகர் பாக்தாத்தில் ஷியா முஸ்லிம்களுக்கு ஆதரவான போராளிகள் 18 பேர் கொல்லப்பட்டதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்தனர்.

கர்பலாவில் - புனித நகருக்கு அருகில் நடைபெற்ற மோதல்களில் மூன்று பொதுமக்கள் உயிரிழந்தனர்.

பஸ்ரா - அமரா ஆகிய பிரதேசங்களுக்கிடையே பிரிட்டிஷ் படையினர் பயணம்செய்துகொண்டிருந்தபோது மறைத்திருந்து தாக்கிய போராளிகளை படையினர் திருப்பித் தாக்கியதில் 20 போராளிகள் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவத்தில் பிரிட்டிஷ் படையினர் இருவர் காயமடைந்தனர்.

அத்துடன், நஜரியாவில் இத்தாலியப படையினருக்கும், சதாரின்



படையினருக்கும் இடையே நடைபெற்ற மோதலின்போது ஐவர் காயமடைந்ததாக ஈராக்கியப் பொலிஸார் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ஜப்பானின் விஷேட தூதுவர் ஹக்கீமுடன் இன்று சந்திப்பு!

இலங்கை வந்துள்ள ஜப்பானிய விஷேட தூதுவர் யசுஷி அகாஷிக்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கும் இடையிலான விசேட சந்திப்பு இன்று நடைபெறவுள்ளது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், கட்சியின் செயலாளர் நாயகம் ஹசன் அலி ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொள்ளவுள்ளனர்.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம், இல்லத்தில் இன்று காலை இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

முன்னெடுக்கப்படவுள்ள சமாதான நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்குபற்றுவது தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின் போது விஷேட கவனம் செலுத்தப்படுமென்று அவர் குறிப்பிட்டார்.

சமாதான நடவடிக்கைகளில் முஸ்லிம்கள் தனித்தரப்பாகக் கலந்துகொள்வதை சர்வதேச சமூகம் உட்பட அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளபோதிலும் அதற்கான அங்கீகாரம் வழங்கப்படாமை ஒரு கேள்விக்குறியாக உள்ளதென்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மேலும் மூன்று காவல் நிலையங்கள் விடுதலைப் புலிகளால் திறக்கப்படும்!

## தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் பா.நடேசன்

அடுத்து வரும் ஒரு மாதகாலப் பகுதியில் மூன்று காவல்துறை நிலையங்களைத் திறப்பதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளதாக தெரிய வருகிறது.

மட்டக்களப்பு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலேயே இந்தக் காவல்துறை நிலையங்கள் திறக்கப்படவுள்ளன.

தமிழீழ காவல்துறையின் பொறுப்பாளர் பா.நடேசன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

1991 ஆம் ஆண்டு தமது இயக்கத்தின் முதலாவது காவல்துறை நிலையம் ஸ்தாபிக்கப்பட்டதாகவும், அன்று முதல் தமிழர் தாயகப்பிரதேசம் எங்கும் தமது காவல்துறை நிலையங்கள் நிறுவப்பட்டு வருவதாகவும் பா.நடேசன் தெரிவித்தார்.

இதுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் 22 காவல்துறை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்தக் காவல்துறை நிலையங்கள் யாவும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமது இயக்கத்தின் காவல்துறை நிலையங்கள் திறக்கப்படமாட்டாதென்றும் அவர் நேற்றுக் கூறினார்.

## காங்கேசன் தளமருகே மீன்பிடிப்பதற்குத் தடை!

காங்கேசன்துறை கடற்படைத் தளத்தை அண்டிய பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலை மேற்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை இறங்குதுறைப் பகுதியல் உள்ள 52 - 4 படைத் தளத்தில் மீனவ சங்கப் பிரதிநிதிகளைக் கடற்படை அதிகாரிகள் சந்தித்துப் பேச்சு நடத்தியபோதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. இச்சந்திப்பில் யாழ். மாவட்டப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இங்கு கடற்படையின் தரப்பில் பேசிய அதிகாரி ஒருவர், காங்கேசன துறைக் கடலை அண்டிய பகுதியிலிருந்து இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலும் கடலில் சுமார் 4 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பாலுமே மீன்பிடியை மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார். (202)

# எமது மண்ணில் அற்புதங்களை நிகழ்த்த வரலாறு தயாராகிக் கொண்டிருக்கிறது!

# புலிகளின் முக்கிய உறுப்பினர் பாலகுமாரன்

எமது மண்ணில் சில அற்புதங்களை நிகழ்த்துவதற்கு வரலாறு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. இந்த அற்புதங்கள் காலத்தின் மூலம வெளிப்படுத்தப்படும் என, விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே. பாலகுமாரன் தெரிவித்தார்.

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'விடுதலை' நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது. இதில் மதிப்பீட்டுரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது -

மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை, தத்துவரீதியிலான விமர்சனக் கருத்துக்களை சிறிய நூலுக்குள் அடக்கியுள்ளமை 'விடுதலை' நூலின் சிறப்பம்சமாகும்.

உலகளாவிய ரீதியில் தோற்றம் பெற்ற பல்வேறு வன்முறைகளையும் விளக்கித் தந்துள்ள நூலாக விளங்கும் இது, சர்வதேச ரீதியிலான விடுதலைப் போராட்டங்களுடன் எமது இன விடுதலைப் போராட்டத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து எழுதப்பட்டுள்ளது.

வரலாறு எமது மண்ணில் சில அற்புதங்களை நிகழ்த்துவதற்கு ஆயத்தமாகிக்கொண்டிருக்கிறது. அந்த அற்புதங்கள் காலத்தின் மூலம் வெளிப்படுத்தப்படும். அதனை நான் தற்போது சொல்லப்போவது கிடையாது.

வரலாறு காணாத முடிவொன்று இந்தியாவில் தற்போது நடைபெற்று முடிந்த தேர்தலின் மூலம் கிடைத்திருக்கிறது. இந்தியாவிற்கு தமிழர்கள் இலகுவாகச் சென்று வரக்கூடிய நிலைமை ஒன்று உருவாகப்போகிறது.

நீங்களும் நாங்களும் சிந்திய கண்ணீர் என்றும் வீண்போகாது. எமக்கு என்றும் நன்மை விளையக்கூடிய சில மாற்றங்கள் தற்போது இந்தியாவில் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

எமது போராட்டத்துக்கு இந்தியா வழங்கிய உதவி என்றும் மறக்க முடியாதது. பாரிய சாதனைகளை தமிழீழ விடுதலைப் புலிகள் நிகழ்த்துவதற்கு இந்தியாவே அடியிட்டிருந்தது. அதில் எம்.ஜி.ஆர், கருணாநிதி எனப் பலரின் சேவைகளும் அடங்கும்.

ஜெயலலிதாவைக் குறைகூற முடியாது. அவரும் எமக்குப் பல்வேறு உதவிகளை வழங்கியவர்.

காலச்சூழல் மற்றும் சில கட்டாயம் முதலானவற்றால் அவர் இன்று மாறிப் பேசுகிறார்.

நடைபெற்று முடிந்த இலங்கைத் தேர்தல் முடிவிலும், இந்தியத் தேர்தல் முடிவிலும் வெளிப்பட்டிருப்பது, ஏழைகளை, ஆட்சியாளர்களே வாழ விடுங்கள் என்கின்ற தொனிப் பொருளே. இதனை ஆட்சியாளர்கள் நன்கு உணர்ந்து செயற்படவேண்டும்.

ஒரு காலத்தில் வன்முறையே சிறந்தவழி என தமக்குச் சாதகமான பல சந்தர்ப்பங்களிலும் யுத்த நடைமுறைகளைக் கையாண்ட ஜே.வி.பியினர், தற்போது அரசியலில் தனித்துவமான இடத்தைப் பிடிக்கத் தொடங்கியுள்ளார்கள். இவர்கள் திருந்தும் மட்டும் நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கு சாத்தியம் ஏற்படாது.

காலத்தின் நிர்ப்பந்தத்தால் ஏற்படப்போகும் மாற்றங்கள் எம்மை அதிர்ச்சிக்குட்படுத்தப் போகிறது. ஜே.வி.பி. மனம் மாறக்கூடிய வாய்ப்புத் தெரிகிறது. அதேபோல் இந்தியாவில் புதிய அரசைப் பொறுப்பேற்றிருக்கும் காங்கிரஸ் கட்சியிலும் மாற்றங்கள் தோன்றக்கூடிய நிலை காணப்படுகிறது. எனவே, சமாதானத்திற்கான சுமுகநிலை தோன்றிவிடும் என நம்புகிறோம்.

இரண்டு இனத்திற்கிடையே இடம் பெற்ற மோதலில் ஓர் சுதந்திர இனம் சார்பாகப் போராடியவர்களை நீதிமன்றில் ஏற்றித் தீர்ப்பு வழங்குவது பொருத்தமான தீர்வாகாது. அதனையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு நியாயமான தீர்வை நோக்கி இலங்கை நகரவேண்டும். அதற்கு இந்தியா உதவவேண்டும் என்பதே அனைத்துத் தமிழரது விருப்பம்.

இன்று இலங்கை பல முன்னேற்றங்களைக் காணும் காலம் நெருங்கி விட்டது. நடப்பவை நன்றாகவே நடக்கவேண்டும் என்பது எமது விருப்பம். நடப்பவற்றைப் பொறுத்திருந்து பார்ப்போம் என வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

## புதூர் கிரனேட் வீச்சு சம்பவம்; கண்காணிப்புக்குழு விசாரணை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரா்ணுவக் கட்டுப்பாட்டில் உள்ள புதூர் பகுதியில் நேற்றுமுன்தினம் அதிகாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவம் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு விசாரணை நடத்திவருகிறது.

இந்த கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் மூன்று இராணுவத்தினரும் ஒரு பொலிஸாரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது தொடர்பாக இராணுவத் தரப்பு - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்குச் செய்த முறைப்பாட்டை அடுத்தே இந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை இந்த கிரனேட் வீச்சுச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்படுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் குறித்து சரியான தகவல்களை ஓரிரு நாட்களுக்குள் தம்மால் அறிவிக்கமுடியும் என்று போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தினர் தெரிவித்தனர்.

## கூட்டறிக்கைகளில் புலிகள்...

இந்தச் சந்திப்பின்போது ஏற்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில்,

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ் தனது பெயருக்கு முன்பாக கேணல் என்ற தனது பதவி நிலையை குறிப்பிட்டிருந்தார்.

அரச படையினருக்கு நிகரான வகையில் இத்தகைய இராணுவப் பதவிநிலைகளை கூட்டறிக்கைகளில் புலிகள் பயன்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என்றும் - இனிமேல் இவ்வாறு இடம்பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் தனது கடிதத்தில் பலகல்ல கேட்டுள்ளார்.

## வட-கிழக்கில் இடைக்கால....

வலியுறுத்தினோம்.

போதிய அதிகாரங்கள் கூடிய இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

சகல அதிகாரம் கொண்ட இடைக்கால சுயாட்சி நிர்வாகசபை அமைவதன் மூலமே யுத்தத்தினால் சேதமடைந்த வடக்கு - கிழக்கை புனரமைத்து இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்த முடியும்.

சர்வதேச சமூகம் இலங்கைக்கு நிதியுதவியை வழங்கும்போது நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த அதனை கருவியாக பயன்படுத்த வேண்டும். சிங்கள தலைமைத்துவம் இனப்பிரச்சினைத் தீர்வில் இழுத்தடிப்பு நிலையை கடைப்பிடித்து வருகின்றது.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் சம்பந்தன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் விடுதலைப் புலிகளிடம் தன்னாட்சி அதிகார சபையை வழங்குவதன் மூலம் வடக்கு - கிழக்கை அபிவிருத்தி செய்யமுடியுமென சம்பந்தன் தெரிவித்ததை அகாஷி ஏற்றுக்கொண்டார்.

அடுத்த மாதம் பிறேசிலில் நடைபெறும் உதவிவழங்கும் மாநாட்டில் இலங்கையின் சமாதான முயற்சியில் தற்போதைய நிலைப்பாடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்கப்போவதாகவும் இந்தச் சந்திப்பில் அகாஷி தெரிவித்தார்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் நிலைப்பாடு குறித்து சம்பந்தன் தெரிவித்த விடயங்களை எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரைச் சந்திக்கும்போது தெரிவிக்கப்போவதாக அகாஷி தெரிவித்தார். (01)

## பாதுகாப்பு...

கடந்த 13 ஆம் திகதி அமைச்சர் கதிர்காமர் ஐந்து நாட்கள் உத்தியோகபூர்வ விஜயமாக வொஷிங்ரன் சென்று அமெரிக்க அரசின் முக்கிய அமைச்சர்களைச் சந்தித்து வருவது தெரிந்ததே.

## பாலாவின்...

மன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் பொதுச் சுடரை ஏற்றிவைத்தார்.

தேசியக் கொடியினைத் தமிழீழ மாணவர் அமைப்பைச் சேர்ந்த கண்ணன் ஏற்றிவைத்தார். வரவேற்புரையினை தமிழீழ நிதர்சனப் பொறுப்பாளர் சி.சேரலாதன் நிகழ்த்தினார்.

வெளியீட்டு உரையினை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் பாப்பா நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் பெற்றுக்கொண்டார்.

சிறப்புப் பிரதிகளை யாழ். மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி வழங்கினார். பேராசிரியர் சோ.கிருஸ்ணராசா, அ.யேசுராசா, வே.பாலகுமாரன் ஆகியோர் மதிப்பீட்டுரைகளை வழங்கினர். இந்த நிகழ்வில் பெருமளவான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.(தீ)

## இலங்கை...

ணத்தில் உள்ளூர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் இடம்பெறவுள்ள பேச்சில் இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீன்பிடிப் படகுகளை தொழிலில் ஈடுபட அனுமதிப்பது தொடர்பாக பேச்சுக்களை நடத்தத் தாம் தயாரில்லை என மீனவர் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

அவர்களது கடற்பரப்பில் அவர்கள் மேற்கொண்ட முறையற்ற மீன்பிடியால் மீன்வளம் அருகிப் போயுள்ளது. இந்தநிலையில்எமது கடலிலுள்ள மீன்வளத்தைச் சுரண்டிச் செல்ல தாம் அனுமதிக்கப்போவதில்லை எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (202)


இறை தியான புதுவாழ்வு வழிபாடு

கொழும்பிலிருந்து
சகோதரன் சாள்ஸ் தலைமையில்
பல குருக்கள் பொது நிலையினர்

ஐம்பதுக்கும் மேற்பட்ட இசைக் கலைஞர்களுடன்
நவீன இசைக்கருவிகளோடும்
நவீன ஒலி அமைப்போடும்



உங்களுக்காக செபிக்க வருகின்றார்கள்

22.05.2004 சனிக்கிழமை மாலை 7 மணிமுதல் 10 மணிவரை

யாழ். மரியன்னை பேராலய திறந்தவெளி அரங்கில்



இன்னிசை மழையில் நனைந்து
இறைவார்த்தையைக் கேட்டு
இறை அனுபவம் பெற்று
புதுவாழ்வு காண

(சி-2529)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

இறைதியான குழுவினர் - ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்


இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.